# உதயன்

சுடர் : 36 | கதிர் : 225 | வெள்ளிக்கிழமை | ஆனி 25 ஆம் நாள் 09 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111



## பஸில் பதவியேற்றதும் பட்டாசுகள் வெடித்து பெரமுன ஆர்ப்பரிப்பு

வவுனியா, ஜூலை 9

பஸில் ராஜபக்ச நிதி அமைச்சராக பதவியேற்றதையடுத்து வடக்கு மாகாணத்தில் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அவரது ஆதரவாளர்கள் பட்டாசுகள் கொளுத்தி 19 ➤



# குடும்ப ஆட்சி உச்சக்கட்டம்

### சஜித் ஆவேசம்

கொழும்பு, ஜூலை 9

நாட்டில் ராஜபக்ச குடும்பத்தினரின் ஆட்சி தலைவிரித்தாடுகின்றது. பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வந்தமையும் நீதி அமைச்சராகப் பதவியேற்றமையும் நாட்டுக்கு எவ்விதத்திலும் நன்மையைத் தராது. இந்தக் காலம் நாட்டுக்கு அழிவு காலம். எனவே, இந்தக் காலத்தை மாற்றியமைக்க நாட்டை நேசிக்கும் அனைவரும் எம்முடன் கைகோர்க்க வேண்டும். 19 ➤

## மின்சாரம் தாக்கி இளம்தாய் சாவு!

முல்லைத்தீவு, ஜூலை 9

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட சுதந்திரபுரம் கொலனிப் பகுதியில் தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த வேளை மின்சாரம் தாக்கி 29 வயதுடைய குடும்பப்பெண் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். உயிரிழந்தவர் இரு பிள்ளை 19 ➤

## அண்ணன்மாரை வணங்கி பதவியேற்றார் பஸில்!

### அமைச்சராகவே மீண்டும் நாடாளுமன்றம் வந்தார்



கொழும்பு, ஜூலை 9

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் 19 ➤



## நவாலி சென்.பீற்றர்ஸ் படுகொலை இன்றுடன் 26 ஆண்டுகள்!

யாழ்ப்பாணம், ஜூலை 9

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் இலங்கை வான் படையினரால் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டு இன்றுடன் 26 ஆண்டுகள் நிறைவடைகின்றன. நவாலியில் கடந்த 1995ஆம் 19 ➤

## பஸில் பதவியேற்ற கையுடன் 2 இராஜாங்க அமைச்சர் பதவிகள் நேற்று மாற்றம்

கொழும்பு, ஜூலை 9

அரசின் இரண்டு இராஜாங்க அமைச்சர் பதவிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுக்கான இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜ 19 ➤

## சாவு 40 மொத்தம் 3,391



கொழும்பு, ஜூலை 9

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 40 பேர் சாவடைந்துள்ள 19 ➤

## நாட்டின் நலன் கருதி கசப்பான விடயங்களை செய்யவேண்டி வரலாம்

### நிதி அமைச்சராக பஸில் பேச்சு



கொழும்பு, ஜூலை 9

'நாட்டின் நலன் கருதி தீர்மானங்களை எடுக்கும்போது தந்தை ஒருவரைப் போன்று சில நேரங்களில் கசப்பான விடயங்களைச் செய்ய வேண்டியேற்படும் இவ்வாறு நிதி அமைச் 19 ➤

## ஆசிரியர்களுக்கு இன்று தடுப்பூசி!

### வழங்கப்படும் இடங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9

பாடசாலை ஆசிரியர்களுக்குத் தடுப்பூசிகள் வழங்கும் திட்டம் இன்றுமுதல் ஆரம்பமாகின்றது. இதன்படி யாழ்ப்பா 19 ➤




## கச்சேரியா? கட்சி அலுவலகமா?

யாழ்ப்பாணம், ஜூலை 9

பஸில் ராஜபக்ச அமைச்சராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் நேற்றுப் பதவியேற்றதை அடுத்து யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக வளாகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதனால் பஸிலுக்கு வாழ்த்துத் தெரிவித்து பதாகை வைக்கப்பட்டுள்ளது. அரசியல் பிரமுகர் ஒருவரை வெளிப்படையாக ஆதரிக்கும் 19 ➤

## கொரோனா 1,223

கொழும்பு, ஜூலை 9

நாட்டில் நேற்று 1,223 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது. இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் 19 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மீதான அடக்குமுறையை துரிதப்படுத்தும் ராஜபக்சக்கள்

## ஜே.வி.பியின் யாழ். அமைப்பாளர் விசனம்

**யாழ்ப்பாணம், ஜூலை 9**

**பொதுமக்கள் மீதான, ராஜபக்சக்கள் அரசின் அடக்குமுறைகள் துரிதமடைந்து கொண்டிருக்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக நாடாளுமன்ற முன்றலில் இடம்பெற்ற(நேற்று) ஆர்ப்பாட்டத்தின்போது தொழிற்சங்கத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கைதுசெய்யப்பட்டமையைக் குறிப்பிடலாம்" என்று, மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் தோழர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**

கட்சியின் யாழ். அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலவசக் கல்விக்குச் சாவுமணி அடிக்கும் கொத்தலாவல சட்ட வரைவை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 2/3 பெரும்பான்மை உள்ளதால் ராஜபக்சக்களின் அரசு எதேச்சதிகாரமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

கொரோனாவையும் தனிமைப்படுத்தல் சட்டத்தையும் பிரயோகித்து மக்கள் நலன்சார்ந்த போராட்டங்களில் அடக்குமுறைகளை மேற்கொள்கின்றது. மக்களின் கருத்துச் சுதந்திரத்தை பறிக்கின்றது.

தேர்தலின்போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் எந்தவொரு வாக்குறுதியையும் இந்த அரசு நிறைவேற்றவில்லை. இலவசக் கல்வியை ஒழித்துக்கட்டுவதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது என்று தெரியவருகின்றது. இதன் விளைவே கொத்தலாவல பல்கலைக்கழகச் சட்டவரைவு.

ரணில்மைத்திரி அரசில் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருந்தபோது, கடுமையாக எதிர்த்தவர்கள் இன்று அதே சட்டவரைவை கொண்டுவந்து இலவசக் கல்விக்கு சாவுமணி அடிக்கத் தயாராகி வருகின்றனர்.

அதுமட்டுமன்றி, அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவதனால், ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் அரசால் பயமுறுத்தப்படுகின்றனர், கொலை செய்யப்படுகின்றனர். இதற்கு எதிராக மக்கள் போராடவேண்டும். என்றார். (து-26)

# தடுப்பூசி போடப்படுவதால் நோயாளர்கள் அலைச்சல்

## *கைதடி மருத்துவமனையில் இந்தநிலை*

யாழ்ப்பாணம், ஜூலை 9

கைதடி ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையத்தில் (பி.எம்.சி.யு) வைத்து, கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படுவதால், காய்ச்சல் உட்பட பல்வேறு நோய்களுக்கும் சிகிச்சை பெறச்சென்றும் சிகிச்சை பெறமுடியாதநிலையில் அவதிப்படுகின்றோம், ஏமாற்றத்துடன் திருப்பி அனுப்பப்படுகின்றோம் என்று நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரமும் இந்த வாரமும் குறித்த மருத்துவமனையில் வைத்தே தினமும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டது. அதனால் ஏனைய நோய்களுக்கு சிகிச்சை பெறமுடியவில்லை என்று நோயாளர்கள் முறையிடுகின்றனர். சிகிச்சைகள் மாத்திரமன்றி, கர்ப்பவதிகள், நீரிழிவு நோயாளர்களுக்கான கிளினிக்குகள் கூட இழுபறிப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மருத்துவமனையில் கைதடி, நாவற்குழி, தச்சந்தோப்பு மற்றும் கோவிலாக்கண்டி என சுமார் 10க்கும் மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு கடந்தவாரமும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் இந்தவாரம் தடுப்பூசி ஏற்றப்பட்டது. குறித்த மருத்துவமனை போதிய இடவசதியின்மையால், கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படும்போது மருத்துவமனையின் சகல பகுதிகளும் பயன்படுத்தப்படும் நிலை காணப்படுகின்றது. அதனால், காய்ச்சல் உட்பட பிற நோய்களுக்கு சிகிச்சை பெறச்செல்லும் நோயாளர்களுக்கு அங்கு சிகிச்சை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், நோயாளர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, கொரோனாத் தடுப்பூசி போடுவதற்கு வேறு இடங்களை பயன்படுத்தி, குறித்த மருத்துவமனையில் நோயாளர்கள் சிகிச்சை பெற வழியேற்படுத்துமாறு நோயாளர்கள் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மற்றும் சுகாதார திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கின்றனர். (து)

# எல்லைக்கிராம மக்களும் தடுப்பூசி பெற்றுக்கொள்ளவும்

## *கிளிநொச்சி சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்து*



கிளிநொச்சி, ஜூலை 9

"கிளிநொச்சி மாவட்டத்தில், எல்லைக்கிராம மக்களுக்கும் தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. படுக்கையில் உள்ள நோயாளர்கள் அழைத்தால் நோயாளர் காவுவண்டியில் ஏற்றி தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்படும். எனவே, அச்சமின்றி தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சரவணபவன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


கடந்த நாள்களில் ஆடைத்தொழிற்சாலையில் தடுப்பூசி ஏற்றப்பட்டபோது சிலர் பக்க விளைவுகள் என்று கூறி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்கள். ஆனால் எந்தவொரு பக்கவிளைவும் ஏற்படவில்லை. சுகாதார மருத்துவ நிபுணர்களால் சோதிக்கப்பட்டு அன்றோ அல்லது மறுநாளோ வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

அதற்கு சான்றாக இன்றுவரை மேலும் 1800 பேருக்கு மேல் தடுப்பூசிகளை வழங்கியுள்ளோம். ஓரிரு நாள்களில் 5 ஆயிரம் தடுப்பூசிகளை வழங்க எதிர்பார்த்திருந்தோம். ஆனால் ஒரு நாளைக்கு 600 பேர் வரையிலேயே தடுப்பூசிகளை பெறுகின்றனர். அச்சம் காரணமாக மக்கள் தடுப்பூசி ஏற்றுவதற்கு ஆர்வம் காட்டவில்லை.

அடுத்தகட்ட நோய்த்தாக்கம் ஏற்படாது என்பதற்கான உத்தரவாதம் இல்லை. அடுத்த தடவை இதைவிட மோசமானதாகக்கூட இருக்கலாம். இரண்டாம் அலை பெரியளவில் தாக்கம் இல்லாவிட்டாலும், மூன்றாம் அலை பெரிய தாக்கமாக அமைந்திருந்தது. எனவே, பொதுமக்கள் எந்தவித அச்சமும் இல்லாமல் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளலாம். இரணைமடு இராணுவ தள வைத்தியசாலை, கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம், பூநகரி மத்திய கல்லூரி ஆகிய இடங்களில் இன்றும் தடுப்பூசிகள் ஏற்றப்பட உள்ளன. எனவே, அனைவரும் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுங்கள் - என்றார். (து-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியிலுள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இன்று தடுப்பூசி




சாவகச்சேரி, ஜூலை 9

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளில் கடமையாற்றும் அனைத்து அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் இன்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் கொவிட், 19 தடுப்பூசி ஏற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படமாட்டாது என ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு வருகிறது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் கடமையாற்றும் பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கென மட்டும் தடுப்பூசி மருந்துகள் வழங்கப்பட்டுள்ளமையால், ஏனைய வலயங்களின் பாடசாலைகளில் கடமையாற்றுவோர் தத்தம் கல்வி வலயங்களில் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறும் அறிவித்துவருகின்றனர்.

இதேவேளை, குறித்த தடுப்பூசிகளை ஏற்றுவதற்கான நேர ஒழுங்கு தொடர்பில், தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் த.கிருபாகரன் பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளார்.

அதன்படி தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

**காலை 8.30 தொடக்கம் 10.30 வரை**

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி., நாவற்குழி ம. வி., கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., கைதடி விக்னேஸ்வரா வி., கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை, மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை, மட்டுவில் கமலாசனி வி., கைதடி குருசாமி வி., கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை, மட்டுவில் சந்திரமௌலீசா வி., மட்டுவில் தெற்கு சரஸ்வதி வி., சரசாலை சிறீகணேசா வி., மறவன்புலவு சகலகலாவல்லி வி., நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வி., கல்வயல் சிறீசண்முகானந்தா வி., கைதடி சேதுகாவலர் வி, கோவிலாக்கண்டி மகாலட்சுமி வி., மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை, மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வி. தனங்களப்பு அ.த.க பாடசாலை, கைதடி நவீல்ட் பாடசாலை.

**மு.ப. 10.30 தொடக்கம் மதியம் 1.00 மணி வரை**

உசன் இராமநாதன் ம.வி., வரணி மத்திய கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கச்சாய் மகா வி., அல்லாரை அ.த.க.பாடசாலை, கொடிகாமம் அரசினர் வி., மந்துவில் சிறீபாரதி வி., விடத்தற்பளை கமலாசினி வி., எழுதுமட்டுவாழ் சிறீகணேசா வி., இடைக்குறிச்சி சிறீசுப்பிரமணியம் வி., மிருசுவில் அ.த.க பாடசாலை, எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை, மந்துவில் றோ.க.த.க. பாடசாலை, குடமியன் அ.த.க. பாடசாலை, கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலை, மிருசுவில் றோ.க.த.க பாடசாலை, வரணி வடக்கு சைவப்பிரகாச வி., போக்கட்டி அ.த.க. பாடசாலை, இயற்றாலை அ.மி.த.க பாடசாலை, கெற்பேலி அ.த க பாடசாலை, நாவற்காடு கணபதிப்பிள்ளை வி., வரணி வடக்கு அ.த.க பாடசாலை, போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை, கரம்பை அ.மி.த.க. பாடசாலை, கரம்பகம் அ.த.க. பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை.

**மதியம் ஒரு மணி தொடக்கம் பிற்பகல் 3.30 வரை**

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை விக்கினேஸ்வரா ம.வி., மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை, சாவகச்சேரி சக்தியம்மன் வி., மீசாலை கமலாம்பிகை வி., சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, வீரசிங்கம் மத்திய கல்லூரி. (து-9,159)

# தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் பாரதூரமான அடக்குமுறைகள்

## ரணில் சீற்றம்: வழக்குத் தாக்கல் செய்யவும் முடிவு

**கொழும்பு, ஜூலை 9**

**அரசுக்கு எதிரான மக்கள் ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கும் கைது செய்வதற்கும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் அதிகாரம் கிடையாது. இதற்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.**

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று சுகாதார நிலைமைகளை கவனத்தில் கொண்டு தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் இவ்வாறான கைதுகளை முன்னெடுக்க முடியாது என்பதை ஏற்கனவே அறிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

'பல்வேறு பிரச்சினைகளை மையப்படுத்தி நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றை அடக்குவதற்கு பதிலாக பிரச்சினைகளை தீர்க்க வேண்டியது அரசின் கடமையாகின்றது. இதனை விடுத்து அடக்குமுறைகளையும் கைதுகளையும் கட்டவிழ்த்து விடுவது என்பது ஏற்புடையதல்ல. இதனை அனுமதிக்கவும் இயலாது. மக்கள் விடுதலை முன்னணி மற்றும் முன்னிலை சோசலிச கட்சி என்பன முன்னெடுத்த ஆர்ப்பாட்டங்களில் கைதுகள் இடம்பெற்றுள்ளமை சட்டத்துக்கு முரணானதாகும். இதனடிப்படையில் அடுத்த வாரத்தில் உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய உள்ளதாக' ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டார். (ஒ.இ)

# தங்கம் ஒரு பவுண் 1,24,000 ரூபா

கொழும்பு, ஜுலை 9

இலங்கையில் ஒரு பவுண் தங்கத்தின் விலை ஒரு லட்சத்து 24 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதனால் தங்க வியாபாரிகள் குறிப்பிட்ட அளவு தங்கத்தை மாத்திரமே சந்தையில் விநியோகித்துள்ளனர்.

இதனால் தங்கத்துக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. எனினும் இது தற்காலிக நிலைமையே. நாட்டுக்குத் தேவையான தங்கம் விரைவில் கொள்வனவு செய்யப்படும் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அதன் பின்னர் தங்கத்தின் விலை குறைவடையும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ஒ.4)

# ஆர்ப்பாட்டத்துக்கு கூடியோர் தனிமைப்படுத்தல்

கொழும்பு, ஜுலை 9

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி கொம்பனி தெருவில் ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைதான அறுவரையும் 14 நாள்கள் தனிமைப்படுத்துமாறு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது.

முன்னிலை சோசலிசச் கட்சி உறுப்பினரான துமிந்த நாகமுவ உள்ளிட்ட 6 பேரும் கோட்டை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்களை பிணையில் விடுவித்ததோடு, அவர்களை 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார். (ஒ.4)

# அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி போராட்டம்!

கொழும்பு, ஜுலை 9



அரசின் ஒடுக்குமுறை செயற்பாடுகளுக்கு எதிராகவும், ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதை கண்டித்தும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்று போராட்டத்தில் ஈடுபட்டது.

நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் இடம்பெற்ற இப்போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

அரசின் ஒடுக்குமுறையான செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். ஊடகங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். போராடுவதற்கான உரிமை வழங்கப்பட வேண்டும் என்பது உட்பட மேலும் பல கோசங்களை ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் எழுப்பினர்.

'நாட்டு வளங்களை பாதுகாக்கவும், தொழில் உரிமைகளை வென்றெடுக்கவும், நீதி கோரியும், நிவாரணம் வேண்டுமென வலியுறுத்தியும், அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகளைக் கண்டித்துமே போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இந் நிலையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை காரணம் காட்டி மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு அரசு முற்பட்டுள்ளது. இதற்கு இடமளிக்கமுடியாது. நாம் போராட்டத்தில் ஈடுபடுகின்றோம். மக்களை கைது செய்ய முன் முடியுமானால் எங்களை கைது செய்யுங்கள்.' என எதிரணி உறுப்பினர்கள் முழக்கமிட்டனர். (ஒ.4.44)

# தென்மராட்சியில் கர்ப்பிணிகளுக்கு நாளை தடுப்பூசி

சாவகச்சேரி, ஜுலை 9

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நாளை கொவிட் 19 தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் இந்தத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதேவேளை ஒவ்வாமை உள்ளவர்கள் மற்றும் அதிக நோய் உள்ளவர்கள் அன்றைய தினம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# மஹிந்தவுக்கு புதிய அமைச்சு

கொழும்பு,ஜுலை 9

பிரதமர் மஹிந்த ராஜபக்ச பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டத்தை செயற்படுத்தும் அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்தார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் அவர் பிரமாணம் செய்தார். இதுவரை காலமும் நிதி அமைச்சராக மஹிந்த ராஜபக்ச கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)









போராட்டத்தில் ஈடுபட்ட

# பெண்கள், பிக்குகள் பாகுபாடின்றி கைது!

கொழும்பு, ஜுலை 9

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். நாடாளுமன்றுக்கு செல்லும் வழியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குகள், பெண்கள் என வேறுபாடுகள் இன்றி பலரை குண்டுக்கட்டாகத் தூக்கி ஏற்றிச் சென்றனர் பொலிஸார்.

இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இரண்டு பிக்குகள், இரண்டு பெண்கள் உள்ளிட்ட 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டு சுமத்தி நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக பிரேரணைக்கு எதிராக போராட்டம் நடத்தினர். (ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் துறையினரின் சம்பளத்தில் திருத்தம்

**கொழும்பு, ஜுலை 9**

**நாட்டின் தனியார் துறை பணியாளர்களுக்கு ஆகக் குறைந்த சம்பளத் தொகையான 10 ஆயிரம் ரூபாவை 12 ஆயிரத்து 500 ரூபாவாகவும், ஆகக் குறைந்த நாள் சம்பளத் தொகையான 400 ரூபாவை 500 ரூபாவாகவும் அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

எனினும், இந்தச் சட்டவரைவு மூலமாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக விதிக்கப்பட்ட எந்தவொரு தடைக்கோ அல்லது கட்டுப்பாடுகளுக்கோ உட்படாது என்றும், அரசியலமைப்புக்கு உட்பட்டது என்றும் சட்டமா அதிபர் சட்டரீதியான சான்றிதழ் வழங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் தனியார் துறை பணியாளர்களுக்கான ஆகக்குறைந்த சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்டவரைவு, தொழில் அமைச்சர் நிமால் சிறிபால.டி.சில்வா தலைமையில் நேற்று நடைபெற்ற தொழிலமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டது. அதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

2016ஆம் ஆண்டு 03ஆம் இலக்க வேலையாள்களின் குறைந்தபட்ச வேதனச்சட்டத்தின் 03ஆவது சரத்தின் திருத்தமாக இது அமையும். குறித்த சட்டவரைவை நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் 2017ஆம் ஆண்டுக்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தின் ஆண்டு அறிக்கை ஆகியவையும் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டன என்றும் இலங்கை நாடாளுமன்றின் பணிப்பாளர் (தொடர்பாடல்) ஷான் விஜயதுங்க ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (து)

# விஸா இல்லையேல் 500 டொலர் தண்டம்

கொழும்பு, ஜுலை 9

விஸா இன்றி நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களிடம் தங்கியிருக்கும் காலத்துக்கான விஸா கட்டணத்துக்கு மேலதிகமாக 500 அமெரிக்க டொலரை அறவிடுவது உள்ளிட்ட விஸா வழங்கும் நடைமுறைகளை மறுசீரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை குடிவரவு குடியகல்வு ஒழுங்குவிதிகளின்படி நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்க பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது என்று இலங்கை நாடாளுமன்றின் பணிப்பாளர் (தொடர்பாடல்) ஷான் விஜயதுங்க ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய குடிவருவோர் குடியகல்வோர் ஒழுங்குவிதிகளுக்காக 2019 ஜுன் 03ஆம் திகதிய 2126/13 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அனுமதிக்காக நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்சவின் தலைமையில் கூடிய இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான டிரான் அலஸ் மற்றும் மேஜர் பிரதீப் உந்துகொட ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். சுற்றுலா விஸா கட்டணத்தை அறவிடும்போது தற்போதைய முறைக்குப் பதிலாக ஒரே கட்டண முறையை அறிமுகப்படுத்துவது, சுற்றுலா விஸாவுக்காக வழங்கப்படும் காலத்தை மூன்று மாதங்களிலிருந்து 09 மாதங்களாக மாற்றுவது உள்ளிட்டவை இதன்மூலம் மேற்கொள்ளப்படும் என குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் யூ.வீ.சரத் ரூபசிங்ஹ தெரிவித்தார்.

அத்துடன் தற்பொழுது இலங்கைப் பெறுமதியில் அறவிடப்படும் விஸா கட்டணம் அமெரிக்க டொலரில் அறவிடப்படும். 2018ஆம் ஆண்டுக்கான ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதி அறிக்கை என்பனவும் இங்கு ஆராயப்பட்டு அனுமதிக்கப்பட்டது. என்று தெரிவிக்கப்பட்டது. (து)

# அமெரிக்கா மீண்டும் பயண எச்சரிக்கை

கொழும்பு, ஜுலை 9

இலங்கைக்கு பயணம் மேற்கொள்ள விரும்பும் அமெரிக்கக் குடிமக்கள் தமது பயணத் திட்டத்தை ஓர் தடவை மீள் பரிசீலனை செய்து கொள்ளுமாறு அமெரிக்கத் தூதரகம் மீண்டும் எச்சரிக்கை அறிவிப்பை விடுத்துள்ளது.


இலங்கையில் கொரோனாப் பரவல் தீவிரமடைந்துள்ளதாகவும், தீவிரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்றும் தனது நாட்டு மக்களை எச்சரித்துள்ளது. அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்ட புதுப்பிக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளுக்கான வழிகாட்டல்களிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு வரும் அமெரிக்க சுற்றுலாப் பயணிகள் தீவிரவாதத் தாக்குதலுக்கு இலக்காகலாம். குறுகிய அறிவிப்பு அல்லது எவ்வித அறிவிப்பும் இன்றி இலங்கையில் தீவிரவாதத் தாக்குதல் ஒன்று நடத்தப்படலாம். பஸ் நிலையம், விமான நிலையம், சுற்றுலாப் பயணிகள் தங்கும் ஹோட்டல் போன்றன தீவிரவாதிகளின் தாக்குதல் இலக்குகளாக இருக்கலாம் என்றும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் எச்சரித்துள்ளது.

**கொரோனா பரவல்**

இலங்கையில் கொரோனா பரவல் தீவிரமடைந்து வருவதன் காரணமாக இலங்கைக்குப் பயணங்கள் மேற்கொள்வது தொடர்பில் அமெரிக்கப் பிரஜைகள் மீள் பரிசீலனை செய்யுமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தால் கடந்த மே 24 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்த, 3 ஆம் மட்ட எச்சரிக்கையானது பயணம் செய்வது குறித்து மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பது 4 ஆம் மட்ட எச்சரிக்கையாகப் பயணம் செய்ய வேண்டாம் என்று மாற்றப்பட்டிருந்தது.



தற்போது குறித்த 4ஆம் மட்ட எச்சரிக்கை மட்டம் மீண்டும், 3ஆம் மட்ட எச்சரிக்கையாக மாற்றப்பட்டிருக்கின்றது. அதன் அடிப்படையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட புதிய பயண அறிவுறுத்தலுக்கமைய, கொரோனா பரவல் அதிகரித்திருப்பதன் காரணமாக இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஒ.22)

# ஏப்.21 குண்டுத்தாக்குதல் ஆஸியில் ஒருவர் கைது

கொழும்பு.ஜுலை 9



உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், ஆஸ்திரேலியாவில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்னில் வசித்து வரும் அஹமட் லுக்மான் தாலீப் என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மெல்பேர்னில் மாணிக்கக்கல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள இவர், ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர் 2010 ஆம் ஆண்டில் ஆயுதங்களை காஸாவுக்கு எடுத்துச் சென்ற போது, இஸ்ரேல் கமான்டோ படையினரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

எனினும் இந்த விடயங்கள் எதுவுமே இலங்கைப் புலனாய்வுப் பிரிவினருக்கு தெரிவிக்கப்படவில்லை.

அதேவேளை அவரது கைது தொடர்பில் இலங்கை பாதுகாப்பு தரப்பில் இருந்து இதுவரை எந்த தகவல்களும் வெளியாகவில்லை. (ஒ.4)

# கடலோரப்பகுதிகளுக்கு வானிலை எச்சரிக்கை

கொழும்பு.ஜுலை 9

மன்னாரில் இருந்து கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையான கடலோரப்பகுதிகளுக்கு வானிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கடல் பகுதிகளில் நாளை வரை மீன்பிடித்தல் ஆபத்தானது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்தக் கடல் பகுதிகளில் காற்றின் வேகம் சில நேரங்களில் 60 தொடக்கம் 70 கி.மீ வேகத்தில் அதிகரிக்கும்.

மன்னார் முதல் புத்தளம் வரையும், காலியில் இருந்து பொத்துவில் வரையும், ஹம்பாந்தோட்டை வரையான கடல் பகுதிகளில் சில நேரங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கும். அதேவேளை நாட்டைச் சுற்றியுள்ள ஏனைய கடல் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அதிகரித்துக் காணப்படும்.

இந்த காலப்பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கு அரசியல் பரபரப்புக்கு மத்தியில் மைத்திரியுடன் அமெரிக்கத் தூதர் பேச்சு

**கொழும்பு, ஜூலை 9**

**இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேரில் சந்தித்து முக்கிய பேச்சு நடத்தியுள்ளார்.**



முன்னாள் ஜனாதிபதியின் அழைப் பின்பேரில் நேற்று முன்தினம் இந் தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.
மேற்படி சந்திப்பில், இரு நாடுக ளுக்கும் இடையிலான உறவுகள் மற்றும் கொரோனாத் தடுப்பு நட வடிக்கைகள் தொடர்பாகக் கலந்து ரையாடப்பட்டுள்ளன.
இதன்போது, தனது பதவிக் காலத் தில் அமெரிக்கத் தூதுவர் வழங் கிய இராஜதந்திர ஒத்துழைப்புக ளுக்கு முன்னாள் ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.
இதேவேளை, இந் தச் சந்திப்பில் பேசப்பட்ட ஏனைய விடயங்கள் வெளியாகவில்லை.
தெற்கு அரசியல் பரபரப்புக்கு மத் தியில் மைத்திரிபாலவுடன் அமெ ரிக்கத் தூதுவர் பேச்சு நடத்தியுள் ளமை முக்கிய விடயமாகப் பார்க் கப்படுகின்றது என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட் டுள்ளனர். (கு-22)



# தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்துவேன்

## பஸில் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 9
நாட்டின் நல்லிணக்கத்துக்காகத் தமிழ்க் கட்சி கள், முஸ்லிம் கட்சிகள் உள்ளிட்ட ஆளும், எதி ரணியிலுள்ள அனைத்துக் கட்சிகளுடனும் நான் பேச்சு நடத்துவேன். சிங்களம், தமிழ், முஸ்லிம் என்று மூவின மக்களின் தேவைகளைக் கண்ட றிந்து அவர்களைத் தேடிச் சென்று குறைநிறை களைக் கேட்டறிந்து சேவையாற்ற நான் தயாராக இருக்கின்றேன். இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.
'ஜனாதிபதியும் பிரதமரும் இந்த நாட்டை அபிவி ருத்தியிலும் பொருளாதாரத்திலும் முன்னோக்கிச் செல்ல உழைக்கின்றார்கள். அவர்கள் இருவரி னதும் கைகளைப் பலப்படுத்தி மக்களின் பக்கம் நின்று சேவையாற்ற நான் விரும்புகின்றேன். எனக்கு எந்த அமைச்சுப் பதவியை வழங்குவது என்று ஜனாதிபதியும் பிரதமருமே தீர்மானம் எடுப்பார்கள். எந்த அமைச்சுப் பதவியையும் ஏற்க நான் தயாராக இருக்கின்றேன். மக்களின் அமோக ஆதரவுடன் நாட்டின் ஆட்சியைத் தீர் மானித்த கட்சியே ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணி.
எனவே, கட்சி பிளவுபட ஒருபோதும் இடமளி யேன். கட்சியை மென்மேலும் வலுப்படுத்து வேன்' என்றார். (ஒ.22)



# கம்மன்பிலவுக்கு சு.க. ஆதரவு

## ஜனாதிபதியுடன் 15 இல் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 9
வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பி லவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது என அறியமுடிகின்றது.
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடை பெற்றது. இதன்போது நம்பிக்கையில் லாத் தீர்மானம், அரச கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் உட்பட சமகால அரசியல் நிலவரங்கள் தொடர் பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.
இதன் அடிப்படையில் பங்காளிக் கட்சித் தலைவர் என்ற வகையில் உதய கம்மன்பிலவுக்கு ஆதரவு வழங்க சுதந்திரக்கட்சி தீர்மானித் துள் ளதன் அடிப்படையில் நம்பிக்கையில் லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்க ளிக்கவுள்ளது.
அதேவேளை, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், சுதந்திரக்கட்சிக்கும் இடையிலான சந்திப்பொன்று எதிர்வ ரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.
சுதந்திரக்கட்சியால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமையவே குறித்த சந்திப் புக்கு ஜனாதிபதி திகதி வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (கு-44)

# சீனப் பிரஜைகளும் ஜனாதிபதியாகலாம்

## குமார வெல்கம தெரிவிப்பு

கொழும்பு.ஜூலை 9
தற்போதைய அரசு இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களை ஜனா திபதித் தேர்தலில் போட்டியிட அனுமதித்தால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சீன நாட்டவர் கூட வேட்பாளராக மாற முடியும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல் கம தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கான முடிவு ஐக்கிய மக்கள் சக்தியின் முடிவாகும்.
எனினும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த கட்சிகள் இந்த விடயத்தில் மாறுபட்ட கருத்துக்களை கொண்டிருக்கலாம். ஆகை யார் யார் வேண்டுமானாலும் ஜனாதிபதி வேட்பாளராக முடியும்.
இந்த நிலையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுவான வேட்பாளரை நிறுத்த வேண்டிய அவசியம் அரசியல் யதார்த்தங்க ளால் தீர்மானிக்கப்படும். என்றார். (ஓ.4)

# பதவி துறக்கத் தயார்! நரிகளுக்கு அஞ்சேன்

## மொட்டு கட்சிக்கு தயாசிறி பதிலடி



கொழும்பு, ஜூலை 9
" இராஜாங்க அமைச்சு பதவியை துறப் பதற்கு நான் தயார். இது தொடர்பில் கட்சிக்கும் அறிவித்துள்ளேன். கட்சி கட்டளையிட்டால் நிச்சயம் விலகுவேன். ஆனால் நரிகளின் ஊளையிடலுக்கு அஞ்சப்போவதில்லை" என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாள ரும் இராஜாங்க அமைச்சருமான தயா சிறி ஜயசேகர நேற்று அறிவித்தார்.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி யிலிருந்து தன்னை கடுமையாக விமர் சிப்பவர்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே தயாசிறி ஜயசேகர இவ்வாறு அறிவிப்பு விடுத்துள்ளார்.
"பஸில் ராஜபக்ச மற்றும் பி.பீ.ஜயசுந் தர ஆகியோரின் நிகழ்ச்சி நிரலுக்கமை யவே தற்போதைய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது. இது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அமைச்ச ரவை அல்ல. சட்டிமுட்டி, பத்திக் என நகைச்சுவைத்தனமாக இராஜாங்க அமைச்சுகளைக்கூட பஸிலே உரு வாக்கினார். அவர் நாடாளுமன்றம் வருவதால் மாற்றம் ஏதும் ஏற்படப்போ வதில்லை." என்று ஸ்ரீலங்கா சுதந்தி ரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயா சிறி ஜயசேகர அண்மையில் வெளி யிட்ட கருத்து அரச கூட்டணிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.
"அரசின் தீர்மானங்களை ஏற்கமுடியா விட்டால், இராஜாங்க அமைச்சர் தயா சிறி ஜயசேகர அரசிலிருந்து வெளியே றுவதே சிறந்தது" என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுபபினா கள் வலியுறுத்திவருகின்றனர்.
இந்தநிலையில், பதவி விலகுவீர்களா என எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கை யில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பதிலளிக்கையில்,
"நான் எனது கட்சிக்காக செய்யவேண் டிய விடயங்களை நிச்சயம் செய்வேன். நாய் குரைப்பதால் மலை சரியப்போவ தில்லை. எமது கட்சி உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். அவர்க ளும் மக்களும் எதிர்நோக்கும் பிரச் சினை பற்றியே பேசினேன். மாறாக எனக்கு அமைச்சு பதவி என்பது பிரச் சினையே கிடையாது. எனவே, பிரச் சினை தீரும்வரை போராடுவோம். நரி கள் ஊளையிடுகின்றமையால் நான் பதவி விலகமாட்டேன். பதவி விலகத் தயார் என கட்சிக்கு நேற்று (நேற்று முன்தினம்) அறிவித்தேன். கட்சிக்காக இதையும் செய்ய தயார். கட்சி மற்றும் தலைவர் சொல்வார்களாயின் நிச்சயம் பதவி துறப்பேன்." என்றார். (கு-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீனாவின் அடிமை நாடாக இலங்கை

## நாணய வெளியீடு எடுத்துக்காட்டு

கொழும்பு,ஜுலை 9

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, இலங்கையில் நாணயம் வெளியிடப்பட்டுள்ளமையானது, சீனாவின் மடியில் எந்தளவுக்கு இலங்கை வீழ்ந்துள்ளது என்பதை வெளிப்படுத்தும் சாட்சியாக உள்ளது என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கணேஷமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இலங்கை மத்திய வங்கி நாணயக் குற்றிகளை வெளியிட்டுள்ளது.

எனினும் வெளிநாடொன்றின் அரசியல் கட்சிக்காக நாடொன்று நாணயக் குற்றிகளை வெளியிடுவது இதுவே முதன் முறை.

இது தொடர்பில் விரிவுரையாளர் கணேஷமூர்த்தி தெரிவிக்கையில்,அரசின் கோரிக்கைக்கு அமையவே, இலங்கை மத்திய வங்கியால் இந்த நாணயக் குற்றி வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் இறக்குமதி விடயங்களில் மாத்திரமே சீனாவின் தலையீடு காணப்படுகின்றது. இலங்கையின் ஏற்றுமதிச் சந்தை என்பது மேற்குலக நாடுகளைச் சார்ந்தே காணப்படுகின்றது. விளைவுகளைப் பொறுத்திருந்தே அவதானிக்க முடியும் - என்றார். (ஒ.4)

# மக்கள் குரலை அடக்கும் அரசு

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு,ஜூலை 9

அரசுக்கு எதிரான மக்களின் குரலைக் கட்டுப்படுத்தவே தனிமைப்படுத்தல் சட்டங்களை அரசு பயன்படுத்துகின்றது என்று ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினர் என்று எமது கட்சியைச் சேர்ந்த ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது துரதிஷ்டவசமானது. வெட்கக்கேடானது. அரசு சட்டங்களை பொது நலனுக்காக பயன்படுத்தவில்லை.

மசாஜ் நிலையங்களை இயக்குவது போன்ற முட்டாள்தனமான நடவடிக்கைகளை அனுமதிக்கும் தற்போதைய அரசு, ஒரு மீற்றர் தூரத்திலிருந்து மசாஜ் செய்வது எப்படி என்பதை நாட்டுக்கு விளக்க வேண்டும் .

தனிமைப்படுத்தல் சட்டங்களை ஜே.வி.பி நிச்சயமாக மதிக்கும். மக்களின் எரியும் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க தயங்க மாட்டோம்- என்றார். (ஒ.4)

# பவித்ராவின் ஆசனத்துக்கு பஸில் ராஜபக்சவால் ஆப்பு

கொழும்பு,ஜுலை 9

நிதியமைச்சரான பஸில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றப் பின்னர், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு, ஒதுக்கப்பட்டிருந்த ஆசனம் பறிபோயுள்ளது.

பஸிலுக்கு நாடாளுமன்றின் ஆளும் கட்சியின் முன்வரிசையில் 9 ஆவது இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணாந்து தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் இந்த ஆசனம் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து சுகாதார அமைச்சருக்கு 10 ஆவது ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஆளும் கட்சியின் முன்வரிசை அமைச்சரான பவித்ரா வன்னியாராச்சி, முன்வரிசையில் இருந்து பின்வரிசைக்கு செல்ல நேரிட்டுள்ளது. (ஒ.4)



# அடுத்த ஜனாதிபதியும் கோத்தாபய ராஜபக்சவே

கொழும்பு,ஜுலை 9

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளரும், கோத்தாபய ராஜபக்சவே என்று துறைமுக அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசமைப்புக்கமைய ஜனாதிபதி ஒருவர் இருமுறை போட்டியிடலாம் என்ற அடிப்படையில் 2024ஆம் ஆண்டிலும், அதன் பின்னரும் ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்சவே இருப்பார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக பஸில் ராஜபக்சவை நிறுத்தவுள்ளோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிய கெட்டகொட தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.4)

# சட்டம் சரியாக இருந்தால் ஹக்கீமும் கைதாகலாம்?

கொழும்பு,ஜுலை 9

நாட்டின் சட்டம் உரிய முறைமையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் இருக்கும் இடத்தில் தான் இருக்க வேண்டும் என்று சிங்களே தேசிய அமைப்பின் தலைவர் டான் பிரியசாத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 கைதிகள் விடுவிக்கப்பட்டமை மற்றும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றில் கருத்து வெளியிட்டிருந்தார். இதற்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு அரசியல் பழிவாங்கல் இடம்பெற்றது. இருப்பினும் ஷானி அபேசேகர, ரஞ்சன் ராமநாயக்க ஆகியோரின் குரல் பதிவுகளில் அந்த அநீதி தெரியவந்தது. அந்த அநீதிக்கு நீதியை நிலைநாட்டவே ஜனாதிபதி செயற்பட்டார் என்று ஹக்கீம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் சிங்கள தேசிய அமைப்பின் தலைவர் டேன் பிரியசாத் தெரிவிக்கையில்,

சஹ்ரான் ஹாசீமின் சகோதரர் குண்டுகளைப் பரிசோதித்து பார்ப்பது தொடர்பான விடயங்களை தென்னிலங்கை ஊடகமொன்று காண்பித்த போது, ரவூப் ஹக்கீமுக்கு வலித்தது - என்றார். (ஒ.4)

# பஸில் வருகைக்கு மூவர் எதிர்ப்பு

கொழும்பு,ஜுலை 9

பஸில் ராஜபக்ச சபாநாயகர் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்த நிகழ்வை ஆளும்கட்சியைச் சேர்ந்த இரண்டு அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உள்ளிட்டோர் புறக்கணித்தனர்.

அமைச்சர்களான விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார மற்றும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ச ஆகியோர் நிகழ்வு நேரத்தில் சபையில் இருக்கவில்லை.

எனினும் அமைச்சர் உதய கம்மன்பில சபா மண்டபத்தில் இருந்துள்ளார். (ஒ.4)

# இலங்கையில் பயங்கரவாத அச்சுறுத்தல் எதுவுமில்லை

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு



கொழும்பு,ஜுலை 9

இலங்கையில் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் நிலவுவது குறித்து எந்தத் தகவலும் வரவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

சுற்றுலா இடங்கள், போக்குவரத்து மையங்கள், சந்தைகள், வணிக வளாகங்கள், ஹோட்டல்கள், கஃபேக்கள், உணவகங்கள், வழிபாட்டுத் தலங்கள், பூங்காக்கள், முக்கிய விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்வுகள் ஆகியவற்றைக் குறி வைத்து இலங்கையில் பயங்கரவாதிகள் தாக்கக்கூடும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவுறுத்தியிருந்தது.

இதற்குப் பதிலளித்துள்ள பாதுகாப்பு செயலாளர், கொரோனா நிலைமை காரணமாக இலங்கை தொடர்பான அமெரிக்கா பயண ஆலோசனையை வழங்கியுள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிரான அச்சுறுத்தலும் அதில் இயல்பாகவே சேர்க்கப்பட்டுள்ளது - என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இளகிய இரும்புகள்!

பொருண்மியத்தில் நலிவடைந்தவர்களிடமும் அப்பாவிப் பொதுமக்களிடமும் அரசும் சில அரச திணைக்களங்களும் தம் பலத்தைக் காட்டுவது இலங்கைக்கு ஒன்றும் புதிதல்ல. அதிலும் கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியில் இது கைதேர்ந்த கலை. இன்னும் சொல்லப்போனால் தொல்பொருள் திணைக்களமும், வன உயிரிகள் திணைக்களமும் கோத்தாபய தரப்புக்கு வாய்த்த இரு பெரும் அடியாள்கள்.

இந்த இரு திணைக்களங்களின் கடந்த கால செயற்பாடுகளைப் பார்த்தால், தமிழர்களை அதிகம் அடக்கியொடுக்கி மலினப்படுத்துவது 'நீயா நானா' என்ற போட்டி இவற்றுக்கு இடையில் இருப்பதைப்போல்தான் நடந்துகொள்கின்றன என்பது கண்கூடு. அதேபாணியில் தற்போது கிளிநொச்சி ஜெயபுரம் மக்களிடத்தில் தன் 'வழக்கமான' சேட்டையைக் காட்டியுள்ளது வன உயிரிகள் திணைக்களம்.

குறித்த பகுதி மக்கள் கடந்த இரு நாள்களுக்கு முன்னர் பாலைப்பழம் பிடுங்கிக்கொண்டிருந்த போது அவர்களை எச்சரித்த வன உயிரிகள் திணைக்களத்தினர், பாலைப்பழம் பிடுங்குவதற்கு மக்கள் பயன்படுத்திய கத்திகளை பறித்துச் சென்றுள்ளனர். சட்ட ஏற்பாடுகளுக்கு அப்பால், இது குறைந்தபட்ச மனிதாபிமானம்கூட இல்லாத செயல்தான்.

கிளிநொச்சியில் மணல் மாபியாக்களின் செயற்பாடுகள் சொல்லி மாளாதவை. அந்தக் கும்பலின் கொடூர ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுப்பது இன்று நேற்றல்ல. போரின் பின்னர் மணல் மாபியாக்களின் அத்துமீறல் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றமை கண்கூடு. ஆனால், இந்த இயற்கைச் சுரண்டலை – சமூக விரோதச் செயலை இதுகாலும் வன உயிரிகள் திணைக்களத்தால் கட்டுப்படுத்த முடியவேயில்லை. இன்னும் சொல்லப்போனால் 'கள்ள மௌனம்' காப்பதுதான் அந்தத் திணைக்களத்தின் வேலையாக உள்ளது.

மணல் மாபியாக்கள் மட்டுமல்ல மரக்கடத்தல்களும், காடழிப்புக்களும்கூட கிளிநொச்சியில் தாராளம்தான். காடழிப்பில் ஈடுபடுபவர்களையும் மரக்கடத்தலில் ஈடுபடுபவர்களையும் பொதுமக்கள் விரட்டியடிக்கும் சம்பவங்கள்கூட கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ள அண்மைக்காலப் பதிவுகள். இதன்போதெல்லாம் காட்டாத, காட்ட முடியாத தம் பலத்தை பாலைப்பழம் பிடுங்கச் செல்லும் அப்பாவிகள் மீது கொட்டித் தீர்ப்பது என்னவிதமான மனோநிலை?.

பாலைப் பழங்கள் இன்றுநேற்றல்ல, காலாதிகாலமாக வன்னிப் பெருநிலப் பரப்புடனும் அதன் மக்களுடனும் இரண்டறக் கலந்துவிட்ட ஒன்று. சிலர் பொழுதுபோக்குக்காக அதைப் பிடுங்குவர். ஆனால் பலர் குறிப்பாக மிகை வறுமைக்கு உட்பட்ட குடும்பங்கள் தம் தற்காலிக வாழ்வாதாரத்துக்காக பாலைப் பழங்களைப் பிடுங்குவது வருடாவருடம் இடம்பெறும் காட்சிகள்தான். பொருண்மியத்தில் நலிந்தவர்கள் வன்னிப் பகுதிகளில் பாலைப் பழ வியாபாரத்தில் ஈடுபடுகின்றமை இன்றும்கூட வழக்கமான ஒன்றே. ஆக, வயிற்றுப் பிழைப்புக்காகப் பழங்களைப் பிடுங்க வந்தவர்களின் கத்திகளைப் பறித்துவைத்துவிட்டு எச்சரித்து அனுப்புவது உண்மையில் பெரும் வங்குரோத்து நிலையே அன்றி வேறென்ன?.

எல்லோரும் பலம் காட்டுவதற்கு 'இளகிய இரும்புகள்' தேவைப்படுகின்றனதான்.




# சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைமீது அமெரிக்கா கண்வைப்பு?

### கம்மன்பிலவுக்கு அழுத்தம் கொடுத்தாரா அமெரிக்கத் தூதுவர்?

கொழும்பு, ஜூலை 9

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலையை விரிவுபடுத்துவதற்கான திட்டம் தொடர்பில் அமெரிக்க தூதுவர் என்னுடன் பேச்சு நடத்தியமை உண்மையே. பகிரங்க விலைமனுகோரல் ஊடாகவே இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும். இலங்கைக்கு சாதகமான தரப்புக்கே வாய்ப்பு வழங்கப்படும். இதுவிடயத்தில் எவரின் அழுத்தங்களுக்கும் அடிபணியப்போவதில்லை என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில திட்டவட்டமாக அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி,

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலையை விரிவுபடுத்துவதற்கான விலைமனுகோரலை தமக்கு வழங்குமாறு அமெரிக்க தூதுவர் உங்களை வலியுறுத்திவருகின்றார். இவ்வாறான அழுத்தத்தை அமெரிக்கா நேரில் விடுக்கின்றதா அல்லது அமெரிக்காவுடன் தொடர்புடைய நபர்கள் ஊடாக விடுக்கப்படுகின்றதா? இதனால் உங்கள் அமைச்சு பதவிக்கும், அரசியல் பயணத்துக்கும் ஏதேனும் சிக்கல் உள்ளதா, என்று வலுசக்தி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் உதய கம்மன்பில,

பிரதமரின் பரிந்துரையின் பிரகாரம் ஜனாதிபதியாலேயே எனக்கு வலுசக்தி அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது. எனவே, இவ்விருவருமே எனக்கு மேலானவர்கள். அமைச்சு தொடர்பில் ஆலோசனைகளை வழங்கியுள்ளனர். தகவல்களைப் பெற்றுள்ளனர். ஆனால் அழுத்தங்களைப் பிரயோகித்ததில்லை. வெளிநாட்டுத் தூதுவர்கள் என்னை சந்தித்து பேச்சு நடத்தியமை தொடர்பில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் தெரியப்படுத்தியுள்ளேன்.

தமது நாட்டிலுள்ள பாரிய நிறுவனங்களுக்காக முன்னிலையாகி தூதுவர்கள் என்னிடம் கோரிக்கைகளை முன்வைத்தனர். இலங்கை வரலாற்றிலேயே இது பாரியதொரு வேலைத் திட்டமாகும். எப்படித்தான் முன்னெடுத்தாலும் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படக் கூடும். எனவே, பகிரங்க விலைமனு கோரல் ஊடாக, இலங்கைக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடிய விலைமனுக் கோரலை முன்வைப்பவருக்கே வழங்கப்படும். உங்களுக்கும் குறித்த விலைமனுகோரலில் பங்கேற்க முடியும் என தூதுவர்களுக்கு நான் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளேன்.


அமெரிக்க தூதுவர் எனக்கு கடிதம் எழுதியது உண்மை, என்னை சந்தித்ததும் உண்மை. உங்களுக்கு ஒரு உத்தரவாதத்தை வழங்குகின்றேன். எவரினதும் அழுத்தங்களுக்கு அடிபணியமாட்டேன் - என்றார்.

(ஒ,44)

# சட்டவிரோதமான மஞ்சள் மன்னாரில் நேற்று மீட்பு

மன்னார், ஜூலை 9

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட ஒரு தொகுதி உலர்ந்த மஞ்சள் மூடைகளை மன்னார் பெரியகடை கடற்கரை கலப்பு பகுதியில் வைத்து நேற்று அதிகாலை இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.



மன்னார் இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இவை மீட்கப்பட்டன. 18 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 672 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மூடைகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டன.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய வள்ளங்கள் 3 மற்றும் பட்டா ரக வாகனமும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். கைப்பற்றப்பட்ட பொருள்கள் அனைத்தும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ஐ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்தலாவல பல்கலைக்கு அரச மருத்துவர்கள் எதிர்ப்பு

**கொழும்பு, ஜூலை 9**

**சுயாதீன அமைப்புக்களால் கட்டுப்படுத்தப்பட முடியாத வகையில் நாட்டில் பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இது பெரிய தாக்கங்களை ஏற்படுத்தும். மாணவர் சேர்க்கையில் குழப்பங்களை ஏற்படுத்தும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும் ஊடகக் குழு உறுப்பினருமான வாசன் ரட்ணசிங்கம் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழகமொன்று எவ்வாறு ஆரம்பிக்கப்படவேண்டும் என்பது தொடர்பில் 1978ஆம் ஆண்டு பல்வேறு சட்ட ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டு அவை நடைமுறையில் உள்ளன. அந்த சட்ட ஏற்பாடுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கண்காணிக்கப்படுகின்றன.

ஆனால் கடந்த ஆண்டு சுகாதார அமைச்சராக ராஜித சேனாரத்ன பதவி வகித்த காலத்தில் கொத்தலாவல பல்கலைக்கழகத்தை இந்தச் சட்டத்தை மீறி உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஏனைய சங்கங்களுடனும் பல்கலை ஒன்றியங்களுடனும் இணைந்து முறியடித்தது.

தற்போது மீளவும் இந்தப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க முயற்சிகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு உருவாகும் பல்கலைக்கழகம் பல்கலை மானியங்கள் ஆணைக்குழுவால் கண்காணிக்கப்படாது. எனவே இவ்வாறு சுயாதீன அமைப்புக்கள் ஊடாக பல்கலைக்கழகம் கண்காணிக்கப்படாவிட்டால் இங்கே உருவாக்கப்படும் பல்கலைக்கழகத்தின் தரம் மாறுபடும். மாணவர்களை உள்ளீர்க்கும் பொறிமுறை குழப்பப்படும்.

அத்துடன் பல்கலைக்கழகத்தை முகாமைத்துவம் செய்ய இராணுவத்தினர் உள்ளீர்க்கப்படவுள்ளனர் என்றும் அறியவருகின்றது. இதை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மிக ஆபத்தானதாகப் பார்க்கின்றது. எனவே இந்தப் பிரச்சினைக்கு உரிய முறையில் சரியானதொரு தீர்வு எட்டப்பட வேண்டும். இல்லையேல் வரும்காலத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்லும் - என்றார். (ம)

## சஹ்ரானின் போதனை பங்குபற்றியவர் கைது

கொழும்பு,ஜூலை 9

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்ட பிரதான சூத்திரதாரி என்று கருதப்படும் சஹ்ரான் ஹாசீமின் அடிப்படைவாத வகுப்புக்களில் கலந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாரம்மலப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய மொஹமட் சியாம் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சஹ்ரானின் போதனை வகுப்புக்களில் கலந்து கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)



## பஸிலுக்கு ஆசிவேண்டி யாழ்ப்பாணத்தில் வழிபாடு

யாழ்ப்பாணம், ஜூலை 9

பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகவும், பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சராகவும் பஸில் ராஜபக்ச பதவிப்பிரமாணம் செய்துள்ளதையடுத்து அவருக்கு ஆசிவேண்டி யாழ்ப்பாணத்தில் ஒரு குழு பூசை வழிபாடுகளில் ஈடுபட்டது.

இந்து, பௌத்த, கிறிஸ்தவ மதகுருக்களின் பங்குபற்றுதலுடன் இந்த பூசை வழிபாடு நடாத்தப்பட்டது. பிள்ளையார் இன் விடுதியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ஒ.இ)

## சிறுமி துஷ்பிரயோகம் மருத்துவர் இடைநிறுத்தம்

கொழும்பு,ஜூலை 9

இணைய வர்த்தகம் ஊடாக 15 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், கடற்படையைச் சேர்ந்த இதய சத்திர சிகிச்சை நிபுணர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று கடற்படை செய்தித் தொடர்பாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடற்படைத் தளபதியின் உத்தரவின் பேரில் சம்பவம் தொடர்பில், உள்ளக விசாரணைகள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பண்டாரகமவைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவர் எதிர்வரும் 19 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஒ.4)



## ரஷ்யாவுக்கான விமான சேவை ஆரம்பம்

கொழும்பு,ஜூலை 9

ரஷ்யாவின் மாஸ்கோவுக்கான நேரடி விமான சேவை எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று சிறிலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இரவு 11.20 மணிக்கு இலங்கையிலிருந்து புறப்படும் விமானம் ஞாயிற்றுக்கிழமை மாஸ்கோவைச் சென்றடையும்.

மேலதிக தகவல்களை 011 777 19 79 என்ற தொலைபேசி இலக்கம் அல்லது www.srilankan.com என்ற இணையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

## தயாசிறியின் அரசியல் கோட்டையில் கருகியது 'மொட்டு' ஓங்கியது 'கை'!

கொழும்பு, ஜூலை 9

பண்டுவஸ்நுவர பிரதேச சபைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் முன்மொழி யப்பட்ட தவிசாளர் தோற்கடிக்கப்பட்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியால் பிரேரிக் கப்பட்ட வேட்பாளர் வெற்றிபெற்றுள்ளார். மேற்படி பிரதேச சபைக்கு புதிய தவிசாளரை தெரிவுசெய்வதற்கான கூட்டத்தொடர் நேற்று நடைபெற்றது. இதன் போது இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளருக்கு 16 வாக்குகளும் , சுதந்திரக்கட்சி வேட்பாளருக்கு 20 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன.

பண்டுவஸ்நுவர பிரதேச சபையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் 18 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் 11 பேரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் ஏழு பேரும், ஜே.வி.பியின் சார்பில் ஒருவரும் அங்கம் வகிக்கின்றனர். குருணாகல் மாவட்டத்தில் பண்டுவஸ்நுவர தேர்தல் தொகுதியானது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகரவின் அரசியல் கோட்டையாகும். அந்தத்தொகுதியிலேயே அவரின் வாக்குவங்கி தங்கியுள்ளது. சபையிலுள்ள சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் அவரின் சகாக்களாவர். மொட்டு கட்சியிலுள்ளவர்கள் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்ணான்டோவின் சகாக்கள்.

தயாசிறி ஜயசேகரவை மொட்டு கட்சி உறுப்பினர்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். இந்நிலையில் அவரின் கோட்டையில் மொட்டு கட்சி மண்கவ்வியமை அரசியல் பின்னடைவாகவே பார்க்கப்படுகின்றது.

அதுவும் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வந்த நாளில் இவ்வாறு இடம்பெற்றுள்ளமை மொட்டு கட்சி ஆதரவாளர்களை சினம்கொள்ள வைத்துள்ளது என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (து-44)



## ஹத்துருசிங்கவுக்கும் சிவில் நிர்வாகப் பதவி

கொழும்பு, ஜூலை 9

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை காலமும் தலைவராக பணியாற்றிய வந்த கமல் ரத்வத்தையின் உயிரிழப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஹத்துருசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். ஹத்துருசிங்க தனது நியமனக் கடிதத்தை இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜெயரத்னவிடம் நேற்றுப் பெற்றார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது

கொடிகாமம்,ஜூலை 9
கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் மட்டுவில் சோலையம்மன் கோவிலடி பகுதியில் வைத்து இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.
இவர்களிடமிருந்து 30 லீற்றர் கசிப்பை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஐ-159)



முல்லைத்தீவு கடற்கரையில்

## உயிரிழந்த நிலையில் கரையொதுங்கிய புள்ளிசுறா!

முல்லைத்தீவு,ஜூலை 9
முல்லைத்தீவு அளம்பில் வடக்கு கடற்கரைப்பகுதியில் உயிரிழந்த நிலையில் புள்ளி சுறா ஒன்று நேற்றுமுன்தினம் கரை ஒதுங்கியுள்ளது.
தென்கடல் பகுதியில் தீப்பற்றி எரிந்த கப்பல் நீரில் மூழ்கியதை தொடர்ந்து நாட்டின் கரையோரப்பகுதிகளில் கடல்வாழ் உயிரினங்கள் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கி வருகின்றன. கடல் ஆமைகள், சுறாக்கள், டொல்பின்கள் போன்ற உயிரினங்கள் கரை ஒதுங்கி வரும் நிலையில் நேற்றுமுன்தினம் புள்ளி சுறா ஒன்றும் கரை ஒதுங்கியுள்ளது. (ஐ-19)

# மூடப்பட்ட பாடசாலையை மீள இயக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி.ஜூலை 9

**கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி பிரதேசத்தில் மூடப்பட்டுள்ள பொன்னாவெளி பாடசாலையை மீள இயக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
உள்நாட்டு யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டு இப் பாடசாலை மூடப்பட்டது.
குறித்த பாடசாலையை 2010 ஆம் ஆண்டிலிருந்து சிவபுரத்தில் இயங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை கைகூடவில்லை. சிவபுரம் கிராமத்தில் 630 வரையான குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் ஆரம்ப பாடசாலையான பொன்னாவெளி பாடசாலையை சிவபுரத்தில் இயங்க வைப்பதன் மூலம் மாணவர்கள் பெரும் நன்மை அடைவார்கள்.
கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாறு எட்டு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. அதிலும் பூநகரி கல்விக் கோட்டத்தில் மட்டும் ஆறு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. எனவே மாணவர்களது நன்மை கருதி மூடப்பட்ட பொன்னாவெளி பாடசாலையை மீள இயங்க வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஐ-13)

சமுர்த்தி அலகால்

## மாணவர்களுக்கு சிப்தொற கல்வி நிதி

நெல்லியடி,ஜூலை 9
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக சமுர்த்தி அலகினால் மாணவர்களுக்கு சிப்தொற கல்வி நிதியும், விவசாயிகளுக்கு தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.
சௌபாக்கியா வாரத்தின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.
2020 2022 காலப்பகுதியில் க. பொ. த. உயர்தர வகுப்புகளில் கற்கும் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 176 மாணவர்கள் சமுர்த்தி திணைக்களத்தின் சிப்தொற கல்வி உபகார நிதிக்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தனர் இந்த மாணவர்களுக்கு மாதம் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் பத்து மாதங்களுக்குரிய தொகையாக தலா 15 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இவர்களில் பத்து மாணவர்கள் ஆரம்ப நிகழ்வுக்கு அழைக்கப்பட்டு கல்வி நிதி வழங்கி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதே வேளை அப் பிரதேசத்தில் சேதனப் பசளையைப் பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபடும் பத்து விவசாயிகளுக்கு தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)

## சௌபாக்கியா நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஜூலை 9
இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சௌபாக்கியா நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து 2020 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 119 மாணவர்களில் 9 மாணவர்களுக்கான காசோலையும், பரிசில் பொதிகளும் வழங்கப்பட்டன. (ஐ)


## வாகனத்தில் அதிக ஆடுகள்; சந்தேகத்தில் மூவர் கைது



வவுனியா.ஜூலை 9
அதிகளவான ஆடுகளை வாகனத்தில் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் 3 பேரை கனகராயன்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் இருந்து மிகிந்தலை பகுதி நோக்கிச்சென்ற கூலர் ரக வாகனத்தில் ஆடுகளை ஏற்றிச் சென்றவேளை. கனகராயன்குளம் பகுதியில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்தனர்.
இதன்போது குறித்த வாகனத்தில் இருந்த 68 ஆடுகளையும் பொலிஸார் கைப்பற்றினர்.
சந்தேகநபர்களை வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-110)

## விபத்துக்களில் சிக்கிய இருவர் சிகிச்சையில்

சாவகச்சேரி,ஜூலை 9
வெவ்வேறு விபத்துக்களில் சிக்கி காயமடைந்த நிலையில் இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
ஏ-9 வீதியில் பட்டா வாகனம் மற்றும் ஓட்டோ போன்ற வாகனங்களுடன் மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் 46 வயதுடைய இருவர் காயமடைந்தனர்.
இந்த விபத்துச் சம்பவங்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. இதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஐ-9)



# வவுனியா நகரம் முழுவதும் பசிலுக்கு ஆதரவாக பதாகைகள்

வவுனியா,ஜூலை 9
வவுனியா நகரம் முழுவதும் "வளரும் நாட்டுக்கான பலம் பசில் ராஜபக்ச" என்று எழுதப்பட்ட பதாகைகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.
இலங்கையின் புதிய நிதியமைச்சராக பசில் ராஜபக்ச ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச முன்னிலையில் நேற்று பதவி பிரமாணம் செய்து கொண்டார்.
பசில் ராஜபக்சவின் நாடாளுமன்ற மீள் வருகையையடுத்து "வளரும் நாட்டுக்கான பலம் பசில் ராஜபக்ச" நாடாளுமன்ற வருகைக்கு வாழ்த்துக்கள் மற்றும் "வடக்கின் வசந்தத் தின் மூலம் பொதுமக்களின் அபிலாசையை பெற்ற நாயகனின் நாடாளுமன்ற மீள்வருகை" போன்ற வசனங்களை தாங்கிய பதாகை கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்ட பயனாளிகள் விவரம்

கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால் யாழ்ப்பாண மாவட்டத்தில் வீடமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளது. இதற்குரிய பயனாளிகள் பட்டியல் பிரதேச செயலர்களால் தெரிவுசெய்யப்பட்டு யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருந்தது. அந்தப் பட்டியல் இங்கே வெளியிடப்படுகின்றது.
இந்தப் பட்டியலில் தகுதியானவர்கள் புறக்கணிக்கப்பட்டு தகுதியில்லாதவர்கள் உள்ள டக்கப்பட்டிருப்பின் அது தொடர்பிலான ஆட்சேபனைகளை பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகத்துக்கு முன்வைக்க முடியும்.

*உதயனின் 077 120 9994 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டும் இது தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம். முறைப்பாடுகளின் உண்மைத்தன்மையை உதயன் ஆராய்ந்து அதனை பிரசுரிப்பதுடன் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடமும் சேர்ப்பிப்பான்.*

## யாழ்ப்பாணப் பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

அன்ரன் ரிச்சாட் செலஸ்ரியா - (ஜே/61), ஜெக்கப் ஜெசிந்தா - (ஜே/61), கந்தையா மயூரன் - (ஜே/61), அலெக்சாண்டர் வில்பிரட் சதீஸ்குமார் - (ஜே/61), அன்ரன் அருட்பிரகாசம் - (ஜே/61), றேமன் செந்தில்குமார் ஆன்சிகா - (ஜே/61), பாக்கியநாதன் கணேஸ் வனிதா - (ஜே/61), பாக்கியநாதன் டார்வின் அந்தோநாயகம் - (ஜே/62), கனகரட்ணம் கிருஷ்ணராஜா மேவின் - (ஜே/62), திருவலூர் சுபைதா - (ஜே/62), செபமாலை ஞானேஸ்வரன் - (ஜே/62), மரியதாஸ் விஜயதாஸ் - (ஜே/62), அனந்தராஜன் ஜெயராணி - (ஜே/62), எசிதோபர் யேசுதாசன்- (ஜே/ 62), சற்குணராஜ் மரியமலர் - (ஜே/63), ஜெயரட்ணம் ஜெயலட்சுமி - (ஜே/63), ஐயாத்துரை மகாலிங்கம் - (ஜே/63), ரத்தினம் யோகராசா - (ஜே/63), ராசநாயகம் திரேசம்மா - (ஜே/64), சிலுவை ஜெனின் லேஜோன்ஸ் - (ஜே/64), றெக் நியூட்டன் - (ஜே/70), வல்லிபுரம் மகேந்திரராசா - (ஜே/79), பசுபதி ஜெயராஜ் - (ஜே/81), கந்தசாமி மதியழகன் - (ஜே/81), நாகமணி சிவபாலன் - (ஜே/81), சிவகுரு ஜேசுராசா - (ஜே/81), ஜெகநாதன் யசோதினி - (ஜே/81), தர்மராஜ் புவனேஸ்வரி - (ஜே/81), கந்தசாமி ஜெயசங்கர் - (ஜே/81), பன்னீர்செல்வம் கிருஷ்ணகுமார் - (ஜே/81), நீக்கிலாஸ் சில்வெஸ்ரர் - (ஜே/83), கந்தையா செல்வரத்தினம் - (ஜே/83), பரமு ஞானராசா - (ஜே/84), சுப்பிரமணியம் உதயதாஸ் - (ஜே/84), தவராசா ரஜனி - (ஜே/84),ஜேசுதாசன் றொபேர்ட் தயான் - (ஜே/85), சலீம் சஞ்சீர் - (ஜே/87), சுல்தான் அப்துல்காதர் கபீபுல்லா - (ஜே/87), சாஹுல் காமிட் நிலம் - (ஜே/87), மார்க்கண்டு இந்திரன் - (ஜே/88), ரத்தினசிங்கம் வளர்மதி - (ஜே/88), நிமலகுமார் பிரதீபா - (ஜே/88), செல்வகுலேந்திரன் விஸ்ணுதரன் - (ஜே/88), அகிலன் அனுசியதீபா - (ஜே/88), சுதாகரன் சயந்தினி - (ஜே/88), டேவிட் அரிதாஸ் - (ஜே/88), இம்மானுவல் அக்னஸ் ரோசலின் - (ஜே/63), அஹஸ்ரின் றொபின் குரூஸ் - (ஜே/64), அப்துல் ஹரீம் - (ஜே/87), அனிஸ் ஒசன் முஹம்மது- (ஜே/87), சந்திரசேகரன் பவானி - (ஜே/ 88), புவனேந்திரன் சசிகலா - (ஜே/88), அருட்பிரகாசம் சிறிகுமார் - (ஜே/61)

## காரைநகர் பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

சண்முகராசா கிருஷ்ணமணி (ஜே-45), பவனாந்தன் தர்சினி (ஜே-48), புவனேந்திரன் வளர்மதி (ஜே-42), வைத்திலிங்கம் மகேந்திரம் (ஜே-44), சோதி மல்லிகாதேவி (ஜே-45), நடராசா பத்மநாதன் (ஜே-45), சிவனேஸ்வரன் நிர்மலா (ஜே-46), ஜெயறமேஸ் சற்குணதேவி (ஜே-46), சுப்பிரமணியம் கமலநாதன் (ஜே-47), கிருஸ்ணராஜ் யோகலக்ஸ்மி (ஜே-48), பாஸ்கரன் ஜெயலலிதா (ஜே-42), ஜெகதீஸ்வரன் கிருபா (ஜே-43), ராஜா சாந்தகுமார் (ஜே-42), சிவஜோதி ஜெயகுமார் (ஜே-40), அருளம்பலம் ஜெகதீஸ்வரன் (ஜே-47), கந்தசாமி பிரதீபன் (ஜே-42), முத்துலிங்கம் பாஸ்கரன் (ஜே-40), வைத்திலிங்கம் ஞானமூர்த்தி (ஜே-40), வேலன் இராசேந்திரம் (ஜே-40), குணநாதம் சுமித்திரா (ஜே-40), கேதீஸ்வரன் விசித்திரா (ஜே-40), திருக்குமரன் சுகுமாரி (ஜே-41), சுந்தரேஸ்வரன் தவலக்ஸ்மி (ஜே-41), பாலு பரமேஸ்வரன் (ஜே-42), அருச்சுனன் யோகராசா (ஜே-42), தம்பிராசா மணியழகன் (ஜே-42), முருகேசு செல்வக்குமார் (ஜே-42), ரமேஸ்வரன் பிரபாகரன் (ஜே-44), உமைபாலன் மோகனதாசன் (ஜே-47), வல்லிபுரம் நிர்வனந்தன் (ஜே-46), பெரியதம்பி மயில்வாகனம் (ஜே-47), கனகசபை உருத்திரன் (ஜே-47), குருசாமி ஞானேஸ்வரன் (ஜே-47), பாலசுப்பிரமணியம் சிவராசா (ஜே-47), விஜேந்திரம் ராஜபவன் (ஜே-47), தபாலசிங்கம் பகீதரன் (ஜே-47), வேலுப்பிள்ளை மகேஸ்வரன் (ஜே-47), சுரன் கங்காதரன் (ஜே-47), வீரசிங்கம் பிரேமதாஸ் (ஜே-48), தியாகராஜா பாலச்சந்திரன் (ஜே-48), நடராசா கோவிந்தராசா (ஜே-48), இராசையா பாலச்சந்திரன் (ஜே-48), நாகராஜ் ஆனந்தராஜ் (ஜே-48), முருகவேல் பாலகிருஷ்ணன் (ஜே-48), ஜெயராசா ஜெயகுமார் (ஜே-48), முத்துராசா சுஜந்தன் (ஜே-48), அப்புக்குட்டி நந்தக்குமார் (ஜே-40), சின்னத்துரை விஜயன் (ஜே-40), இராசதுரை நடேஸ்வரன் (ஜே-42), தம்பையா தர்மபாலன் (ஜே-43), குமரேசராசா குமாராந்தன் (ஜே-44), வல்லிபுரம் கணேசனாந்தன் (ஜே-42), விநாயகமூர்த்தி கிருஷ்ணமூர்த்தி (ஜே-47)

### ஆறு லட்சம் ரூபா வீடு

சிவனையா பவானியம்மா (ஜே- 44), சுப்பிரமணியம் சற்குணநாதன் (ஜே- 44), துரைராசா லட்சுமி (ஜே- 45) மாணிக்கவாசகர் சுபத்திராதேவி (ஜே- 48), மாணிக்கம் நாகம்மா (ஜே- 48), தம்பிப்பிள்ளை சடாச்சரம் (ஜே- 40), உருத்திரகுமார் கிருஸ்ரினா (ஜே- 41), ஆறுமுகம் நடேசன் (ஜே- 43 ), குலசிங்கம் சரோஜாதேவி (ஜே- 43) சச்சிதானந்தம் சரோஜா (ஜே- 45 ), உதயரூபன் கமலா (ஜே-45 ), நடராசா துரைசிங்கம் (ஜே- 45), கதிரைமலை கௌரிதேவி (ஜே- 46 ), பாலசுப்பிரமணியம் கோகிலதர்ஷினி (ஜே- 42 ), வைத்தி குணராசா (ஜே-40), சோமசுந்தரம் ஸ்ரீஸ்காந்தராசா (ஜே-40), ஆறுமுகம் மாணிக்கம் (ஜே-44), நாகமுத்து இராமலிங்கம் (ஜே-45), சபாரத்னம் பழனிஆனந்தம் (ஜே- 45 ), தம்பு சிவசுப்பிரமணியம் (ஜே- 42), தனபாலன் சங்கீதா (ஜே- 40 )

## கரவெட்டி பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

செல்லத்துரை சிவகுமாரன் (ஜே / 349), சந்திரகுமார் சிந்துஜா -(ஜே/352), ராமசாமி ரமேஷ் -(ஜே/354), சுதீசன் செல்வரஞ்சினி -(ஜே/355), பொன்னுத்துரை இன்பசாகரன்-(ஜே/358), சிவநேசன் கலையரசி -(ஜே/358), கோணேஸ்வரன் கமலநிதி -(ஜே/359), தனசேகரம் புஸ்பலதா-(ஜே/359), கந்தன் செல்வராசா -(ஜே/359), நாகராசா நாகேஸ்வரன் -(ஜே/360), நாகன் விமலராஜன் -(ஜே/361), கணேஷ் யமுனா -(ஜே/361), நற்குணம் ரகுநாதன் -(ஜே/363), தம்பு மோகன் -(ஜே/363), வன்னியசிங்கம் வில்வராசா -(ஜே/365), கந்தர் சோதிலிங்கம் -(ஜே/366), கார்த்திகேசு உதயகுமார் -(ஜே/366), முத்துலிங்கம் பரமேஸ்வரன் -(ஜே/367), வீமராசா சற்குணராசா -(ஜே/367), குகனேஸ்வரன் சுசித்திரா -(ஜே/368), அமலதாஸ் சுசீலா -(ஜே/374), செல்வராசா திலீபன் -(ஜே/375), சந்திரகுமார் கபில்ராஜ் -(ஜே/361), ராசேந்திரம் நவராதன் -(ஜே/378), புலேந்திரலிங்கம் ராஜேஸ்வரி -(ஜே/353), காசிப்பிள்ளை செல்வராசா -(ஜே/354), முருகையா சைலேந்திரன் -(ஜே/369), சேவியர் என்ஜ்ன் நவராஜ் -(ஜே/382), குணராசதேவன் ரமணி -(ஜே/353), சுதாகரன் ரசிதா -(ஜே/357), பரமநாதன் நவரத்தினம் -(ஜே/362), கந்தப்பு குகதாசன் -(ஜே/368, ஆறுமுகம் வள்ளியம்மை -(ஜே/360), கிருஷ்ணப்பிள்ளை வசந்தன் -(ஜே/360), சத்தியமோகன் கெங்கேஸ்வரி -(ஜே/356), குலராஜ் ஜெமிலா -(ஜே/358), கணபதிப்பிள்ளை லக்சுமி -(ஜே/360), செல்வலிங்கம் சுயதினி -(ஜே/361), ரவிச்சந்திரன் தர்சினி-(ஜே/364), தங்கராஜ் ரெசிகரன் உதயமலர் -(ஜே/348), தம்பிப்பிள்ளை சிறீதர் -(ஜே/350), ஆதம்பாபு முஹமதுசரிப்பு -(ஜே/351), ரஜீந்திரன் சேகர் -(ஜே/356), நட்சத்திரம் சந்திரன் -(ஜே/362), பொன்னன் உருத்திரராசா -(ஜே/362), சிவானந்தம் ரஜீதன் -(ஜே/365), தம்பன் பழனி -(ஜே/368), சிதம்பரப்பிள்ளை தேவலிங்கம் -(ஜே/373), புஸ்பராசா பார்த்தீபன் -(ஜே/375), இராசையா பார்த்தீபன் -(ஜே/377), கணேசன் பிரபாகரன் -(ஜே/380), பத்மநாதன் பிரபாகரன் -(ஜே/380), ராஜேஸ்வரன் வினோதினி -(ஜே/374), நவேந்திரன் வினோதன் -(ஜே/364), தங்கராசா சிவரூபராசா -(ஜே/350), வேலுப்பிள்ளை பிரபாளினி -(ஜே/372), நீலகண்டன் வாமதேவன் -(ஜே/379), நடேசு தர்மரட்ணம் -(ஜே/379), சித்திவிநாயகம் மோகன்லால் -(ஜே/370), ராசரட்ணம் முகுந்தன் -(ஜே/370), நவரட்ணம் ராஜ்குமார் -(ஜே/370), அல்வாப்பிள்ளை நாகேந்திரம் -(ஜே/370), நந்தகுமார் சுசிகலா -(ஜே/370), விஜயகுமார் சுபாசினி-(ஜே/370), ரங்கநாதன் தேவஜெய்ந்தி -(ஜே/349), சூரியபாலன் தங்கமதி -(ஜே/371), மதன் கலைச்செல்வி -(ஜே/371), சிறீமாயகிட்ணன் யோகேஸ்வரி -(ஜே/371), சிங்கராசா சிவராசா -(ஜே/371), மார்க்கண்டு கிருஷ்ணகுமார் -(ஜே/371), தவராசா ஜெயராசா -(ஜே/371), மாசிலாமணி வரதராஜன் -(ஜே/371), தில்லைவனராஜா ஜெயவனராஜா -(ஜே/351)

### ஆறு லட்சம் ரூபா வீடு

தர்மன் வல்லிக்கொடி -(ஜே/ 375), பொன்னையா யோகபாக்கியம் -(ஜே/379), பாலசுப்பிரமணியம் மங்களேஸ்வரி -(ஜே/351), ஜீவதாஸ் தர்சினி -(ஜே/351), திருமால் ராஜேஸ்வரி -(ஜே/351), முத்தன் தயாநிதி -(ஜே/365), சரவணமுத்து நாராயணசாமி -(ஜே/378), நாகமுத்து வசந்தகுமாரி -(ஜே/365), தம்பையா வசந்தராணி -(ஜே/353), நடராசா சீதாகுமாரி -(ஜே/378), சிதம்பரநாதன் பிரேமாநந்தம் -(ஜே/380), சின்னக்கிரி ராஜேஸ்வரன் -(ஜே/357), பத்மநாதன் மலர் -(ஜே/357), ராசகிளி ராசகருணா -(ஜே/352), இராசகுமார் சுசிலா -(ஜே/352), நடராசா இரஞ்சினி -(ஜே/362), கந்தவனம் சரவணமுத்து -(ஜே/349), சிவகுருநாதன் குலேஸ்வரி-(ஜே/358), பாலசிங்கம் ஜெகதீஸ்வரி -(ஜே/358), ரட்ணம் ஜெயமலர் -(ஜே/360), அசோக்குமார் மலர்விழி -(ஜே/ 360), திருச்செல்வம் யோகேஸ்வரி -(ஜே/360), தம்பு செல்லத்தம்பி -(ஜே/360), கந்தசாமி இராஜேஸ்வரி -(ஜே/360), இராசன் சந்திராதேவி -(ஜே/360)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் திட்ட பயனாளிகள் விவரம்

## சங்கானை பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

ரஞ்சன் சுபத்திரா - (ஜே/171), விஜயகுமார் விக்னேஸ்வரி - (ஜே/ 174), ராசகுலேந்திரன் மனோகரதேவி - (ஜே/180, ராசதுரை ராசவதனா - (ஜே/170), பரமநாதன் யோகதர்சன் - (ஜே/166), ஜேம்ஸ்பேனாட் கலைவாணி - (ஜே/172), சின்னத்தம்பி சரோசம்மா - (ஜே/181), கணேசமூர்த்தி சிவபாலன் - (ஜே/171), தர்மராசா லலிதாவதி - (ஜே/163), சின்னவன் செல்வரத்தினம் - (ஜே/164), நாதன் ரோகினி - (ஜே/165), கிருஷ்ணகுமார் தேவபத்மினி - (ஜே/165), கதிர்வேலு சித்திவிநாயகம் - (ஜே/167), ஜோசப்தாசன் அல்பினோ - (ஜே/167), சரவணை தர்மராசா - (ஜே/168), நன்னிதம்பி சகுந்தலாதேவி - (ஜே/170), வைரவன் மங்கையற்கரசி - (ஜே/170), மதன் ரவிச்சந்திரன் - (ஜே/171), சிவஞானம் கிருஷ்ணபவன் - (ஜே/171), தவரஞ்சன் தயாபரதேவி - (ஜே/171), மரியமுத்து சந்திரன் - (ஜே/172), ரமணிதரன் மாலினிதேவி - (ஜே/172), செல்வராசா தனபாலசிங்கம் - (ஜே/176), பிரபாகரன் குணேஸ்வரி - (ஜே/176), செல்லத்துரை நாகேந்திரன் - (ஜே/178), பொன்னன் அருணகிரி - (ஜே/178), ராஜேந்திரன் ரஜிகலா - (ஜே/178), செல்லையா நவநாதன் - (ஜே/178), மரியமுத்து மகேந்திரன் - (ஜே/179), பொன்னுத்துரை தவசீலன் - (ஜே/180), ரத்தினம் வசந்தமோகன் - (ஜே/180), கிருஷ்ணன் தியாகராசா - (ஜே/181), ரட்ணம் உதயகுமாரன் - (ஜே/181), ஆறுமுகம் இலங்கைநாயகம் - (ஜே/181), கணேசகுமார் புஸ்பாவதி - (ஜே/ 173), இந்திரராசா கோணேஸ்வரி - (ஜே/159), துரை சந்திரமதி - (ஜே/162), செல்லன் புவனேஸ்வரி - (ஜே/165), குணரட்ணம் புனிதவதி - (ஜே/168), நடேசு சுகிதா - (ஜே/ 170), ராசன் யோகேஸ்வரி - (ஜே/170), மனோகரன் ரத்தினேஸ்வரி - (ஜே/171), நவநீதன் விஜயராணி - (ஜே/171), விசுவாசம் மங்கையக்கரசி - (ஜே/171), கஜந்தன் ருக்குமணி - (ஜே/172), தர்மலிங்கம் விஜயராணி - (ஜே/173), நவரத்தினம் முரளிதரன் - (ஜே/174), செல்வராஜா ரகுபரன் - (ஜே/178), விக்னேஸ்வரன் மாலா - (ஜே/180), சுரேந்திரன் ரஜினிதேவி - (ஜே/181), சதாசிவம் வசந்தன் - (ஜே/170), வரதராசா மங்கையற்கரசி - (ஜே/180, கந்தையா ஞானசேகரம் - (ஜே/162), மாரிமுத்து சிவநாதன் - (ஜே/162), கனகன் பொன்னுத்துரை - (ஜே/163), சின்னத்தம்பி சிவராசா - (ஜே/168), வைத்தியன் மதியாபரணம் - (ஜே/172), வேலன் நல்லதம்பி - (ஜே/172), மயில்வாகனம் விஜியரத்தினம் - (ஜே/174), ஜெகதீஸ்வரன் சாந்தா (ஜெகதீஸ்வரன் சங்கீதா) - (ஜே/179), ரத்தினம் சிறீகாந்தன் - (ஜே/179), சின்னத்துரை ரவீந்திரன் - (ஜே/180), முருகன் கனகேஸ்வரன் - (ஜே/180), தம்பிராசா மகேந்திரன் - (ஜே/157), திருச்சிற்றம்பலம் இளங்குமாரன் - (ஜே/158), பொன்னுத்துரை பொன்தாசன் - (ஜே/163), பரமலிங்கம் மோகனரட்ணகுமார்- (ஜே/165), செல்வராசா வசந்தீபன் - (ஜே/165), ஞானசீனன் அந்தோனிப்பிள்ளை - (ஜே/165), மணிவண்ணன் புவனேஸ்வரன் - (ஜே/169), சின்னத்துரை விஜயகர்ணன் - (ஜே/170), செல்லையா ஏகன் - (ஜே/171), மாரிமுத்து சின்னராசா - (ஜே/171), மூர்த்தி தயாபரன் - (ஜே/172), சிதம்பரநாதன் செல்வநாதன் - (ஜே/172), கந்தையா கருணாகரன் - (ஜே/177), ராஜா கந்தன் - (ஜே/178), நாகராசா புஸ்பராசா - (ஜே/178), மோகனநாதன் சந்திரகலா - (ஜே/180), தில்லையம்பலம் அருட்செல்வம் - (ஜே/180), நவசீலன் அற்புததேவி - (ஜே/180), மாணிக்கம் நல்லகுமார் - (ஜே/180), சின்னக்கிரி அரியபுத்திரன் - (ஜே/180), மார்க்கண்டு லிங்கேஸ்வரன் - (ஜே/180), கதிரன் விஜயராசா - (ஜே/180), சங்கரன் தமிழ்ச்செல்வம் - (ஜே/181), கதிரவேலு அழகராசா - (ஜே/181), நகுலேஸ்வரன் கோணேஸ்வரி - (ஜே/181), சின்னத்தம்பி சிவச்செல்வரத்தினம் - (ஜே/170), கதிரவேலு கிருஷ்ணலிங்கம் - (ஜே/176), கோவிந்தசாமி செல்வராசா - (ஜே/178), நல்லன் சுந்தரலிங்கம் - (ஜே/170), ராசு திருச்செல்வம் - (ஜே/181)

### ஆறு லட்சம் ரூபா வீடு

விஜயகாந்தன் யோகேஸ்வரி (ஜே/181), வீரகத்தி கந்தையா- (ஜே/166), பொன்னுத்துரை தெய்வானை (ஜே/172), கிருஷ்நந்தன் பாக்கியலக்ஷ்மி - (ஜே/175) மதன் வசந்தி - (ஜே/162) கனகரத்னம் செல்வராணி- (ஜே/ 158) வேலுப்பிள்ளை ரோசாமலர் - (ஜே/162), சிவராசா ராசாத்தி - (ஜே/168) கந்தன் செல்லன் - (ஜே/170), திருச்செல்வம் விஜயகுமாரி- (ஜே/170) , தெய்வேந்திரம் சிவக்கொழுந்து - (ஜே/172), ரட்ணம் சரஸ்வதி - (ஜே/172), மதன் கனகன்- (ஜே/ 174), கனகசபாபதி புனிதமலர்- (ஜே/163), கண்டியா ஞானபூரணம்- - (ஜே/167) அருமைத்துரை தவம் - (ஜே/168), சந்திரன் விசுவரூபி - (ஜே/172), ராமு நந்தவதி - (ஜே/174), கதிரமலைநாதன் யோகராணி - (ஜே/176), முருகநாதன் சிவநேஸ்வரி - (ஜே/ 176), புலேந்திரன் நாகேஸ்வரி - (ஜே/ 177), அரசன் மைனா - (ஜே/ 178), கேதீஸ்வரன் புஸ்பராணி - (ஜே/178), சற்குணதாஸ் லிங்கேஸ்வரி - (ஜே/180), சந்திரராசா குகனேஸ்வரி - (ஜே/180), சந்திரசேகரம் மல்லிகாதேவி - (ஜே/180), ஜெயக்குமார் அன்புமலர்- (ஜே/180), ராமன் ராசகுமாரன்- (ஜே/172), ஜெயராசா தயாவதி - (ஜே/176), ராசு சுஜிதா - (ஜே/178), கந்தன் சின்னத்துரை - (ஜே/170) ஆழ்வன் கிருஷ்ணன் - (ஜே/170), செல்லத்துரை செல்வரத்னம் - (ஜே/170), சின்னத்துரை நவரத்னம் - (ஜே/180), பரமு செல்வநாயகம் - (ஜே/180),, தயானந்தராசா பவித்ரா - (ஜே/ 158), கந்தவேல் மங்கலராணி - (ஜே/170), மரியதாஸ் சுகராஜ் - (ஜே/171), மயில்வாகன்ம் செல்வம் - (ஜே/172), சுந்தரம் சிறீதரன்

## ஊர்காவற்றுறை பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

கணபதி பரஞ்சோதி (ஜே - 38), சின்னதம்பி முருகேசு (ஜே- 38 ), மயில்வாகனம் ரத்தீஸ்வரன் (ஜே -38 ),ராஜேஸ்வரன் ராஜவர்மன் (ஜே - 56 ),ஜெயம் ஜெயரூபன் (ஜே -38), சுப்பையா ரவீந்திரன் (ஜே - 39) அன்ரனி சிசில் பினான்ஸ் (ஜே - 39 ),ஜோசப் பெர்ணாண்டோ சுபாஸ் சுரேந்திரன் (ஜே - 51), யோவன் திருவருள்நேசன் (ஜே - 51 ), சிறில் ஞானசிறி (ஜே -51 ), நவரெத்தினம் உதயகுமார் (ஜே -38 ),சந்திரசேகரம்பிள்ளை தவராசா (ஜே -60),பாலசுப்பிரமணியம் டெல்டன் டெர்சியா மெலானி (ஜே -49 ),ஜோசாய் ஜேசுதாசன் (ஜே - 54 ), அமிர்தவாசகம் லூயிஸ் மேரி மென்போத்(ஜே - 58), பாலேந்திரன் ஜெகதீஸ்வரி (ஜே - 60), செல்வரத்தினம் ஐயங்கரன் (ஜே - 60), காந்தசாமி வெனிஸ்ரன் (ஜே - 51), தயாணந்தகுமார் விமலதேவி (ஜே- 51 ),வேலும்மயிலும் பாலச்சந்திரன் (ஜே -56 ),ஶ்ரீகாந்தன் பிரம்மிலா (ஜே -57), பத்மசிறிரன் தமயந்தி (ஜே -60), வேலுப்பிள்ளை மார்க்கண்டு (ஜே - 37 ), வீரவாகு கனகசபாபதி (ஜே - 37),செல்லன் ஜோர்ஜ் (ஜே -50), செல்லையா ரவீந்திரன் (ஜே - 53),செபமாலைமுத்து தவஞானராசா (ஜே -55), விசுவாசம் கின்சன் (ஜே -55 ), சோமு குலசேகரம் (ஜே - 59 ), நமசிவயம் நவரத்னராஜா (ஜே - 59 ), வீரசிங்கம் விக்னேஸ்வரன் (ஜே - 60 ),செல்லத்துரை கனநாதன் (ஜே -60 ), உதயக்குமார் ரோகன்ராஜ் (ஜே -51 ), சின்னத்தம்பி சிவகுமார் (ஜே - 37 ), ஐயம்பிள்ளை நாகநாதன் (ஜே -50 ), கந்தையா வேலும் மயிலும் (ஜே -50 ),நாகராஜா வரதராசா (ஜே -50), மகாலிங்கம் ஜெயச்சந்திரன் (ஜே -53 ), இராசரத்தினம் ஜெயக்குமார் (ஜே - 53 ), சவுரிமுத்து கிறிஸ்ரியன் (ஜே - 54 ), பாவிலு செல்வராசா (ஜே -55 )

ஆசீர்வதம் ஸ்டான்லி (ஜே -55 ), வேலாயுதம் பொனாபின் பியாசன் (ஜே - 55 ), மாட்டீன் பேதுருபிள்ளை (ஜே -56 ), தெய்வேந்திரன் ஜெயராசா (ஜே -56), பிரான்சிஸ் ஜேசுராசா (ஜே - 57 ), பேதுரு ஜேசுராசா (ஜே -58), நவரத்னம் அருணோதயகுமார் (ஜே - 60), கிருஷ்ணமூர்த்தி யசோதா (ஜே -60 ),இராயப்பு ஜெயக்குமார் (ஜே - 58 ),சுந்தரலிங்கம் பகீரதன் (ஜே - 59 ),ரத்தினசிங்கம் மரிஸ்தான் (ஜே - 50), சிவானு மகேந்திரன் (ஜே- 56),

### ஆறு லட்சம் ரூபா வீடு

தியாகராசா பொன்மணி (ஜே-56),மனோகரன் சிவபுஸ்பராணி (ஜே-50) சிதம்பரம் நாகம்மா (ஜே-38),பேரம்பலம் பாக்கியலக் ஷ்மி (ஜே-37) சோமன் சிவனாடியன் (ஜே-38), யேசுதாசன் ஜெரோம் எலியா ரீற்றா(ஜே 49)',செபஸ்ரியன் அமிர்தநாதன்(ஜே-49),நிக்கிலன் மிக்கெல் (ஜே-57) சண்முகலிங்கம் தனலட்சுமி (ஜே-37),சிவலிங்கம் மங்களேஸ்வரி (ஜே-38),கந்தையா அரியபுத்திரன் (ஜே-38),மரியா லூசியா பெர்னாண்டோ(ஜே -49),சீவரத்னம் திருகுணநாதன் (ஜே-50),சிவபெருமாள் ஞானேஸ்வரி (ஜே-50),சின்னையா கனகராசா (ஜே - 51),யேசுதாசன் பற்றீசியா (ஜே - 57),பிரான்சிஸ் யேசுராசா (ஜே-57) என்ரெட்ஸ் செல்வதி (ஜே- 57),யேசுராசா பிரான்சிஸ்கா (ஜே-57),அந்தோனி பார்னந்து செல்வராணி (ஜே-51),யேசுதாசன் ரிமிலா (ஜே-59)

## நெடுந்தீவு பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

நடராசா மகாலிங்கம் - (ஜே/01), முத்துக்குமாரு கணேசலிங்கம் - (ஜே/01), தம்பியா நடராசா - (ஜே/01), அந்திரேசு பீற்றர் - (ஜே/03), பொன்னையா கந்தையா - (ஜே/04), சந்தியாப்பிள்ளை அருள்நேசன் - (ஜே/04), பழனி கருணாகரன் - (ஜே/04), மரியதாஸ் மரியபகீரதன் - (ஜே/04), மரியம்பிள்ளை தோமஸ் [illegible] - (ஜே/04), அந்தோனிப்பிள்ளை கில்பேர்ட் சனிஸ்ரன் - (ஜே/04), அந்தோனிப்பிள்ளை [illegible] ஜெனிஸ்ரன் - (ஜே/04), பெர்னாண்டோ சகாயாதேவதாஸ் - (ஜே/05), பிலிப்பையா ஆனந்தராஜ் - (ஜே/05), ஜசுதாசன் ஜனதாஸ் - (ஜே/05), அருளானந்தம் அன்ரன் கனிஜுட் - (ஜே/05), மடுதீன் வின்சன் சகாயசீலன் - (ஜே/05), அருளப்பு தேவதாஸ் - (ஜே/06), அல்பிரட் மரியவேதநாயகம் - (ஜே/06), பெனடர் எட்மன் தேவராசா - (ஜே/06), பேதுருப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை - (ஜே/06)

### ஆறு லட்சம் ரூபா வீடு

அன்ரன்மேரி அருணா - (ஜே/01), ராமச்சந்திரன் பவாநந்தன் - (ஜே/01), ராசேந்திரம் ஜூலியஸ் - (ஜே/03), அன்ரன் செல்வராசா ஜெயநந்தராசா - (ஜே/04), கிறிஸ்ரியன் அருள்ரூபன் - (ஜே/04), திசைவீரசிங்கம் மரியபுஸ்பம் - (ஜே/04), சின்னப்பு வேதநாயகம் - (ஜே/05), கய்த்தம்பிள்ளை சகாயதாசன் - (ஜே/06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்கள் பல நிறைந்த கிளிநொச்சியை வறுமையற்ற மாவட்டமாக மாற்றுவோம்

## கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஜூலை 9**

**வளங்கள் நிறைந்த கிளிநொச்சி மாவட்டத்தை வறுமையற்ற மாவட்டமாக மாற்ற அனைவரும் முன்வர வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில் சௌபாக்கியா உற்பத்தி கிராமத்துக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எங்களுக்கு இருக்கின்றதான வளங்களை பயன்படுத்திக் கொண்டு அவ் வளங்கள் மூலமாக எங்களது வாழ்க்கையை முன்னேற்றிக்கொள்வதற்கு முனைய வேண்டும். ஒவ்வொரு தனி மனிதர்களும் தங்களுடைய வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு முனைவார்க ளாக இருந்தால் உண்மையில் எங்களுடைய மாவட்டத்தில் வறுமை என்பது நீங்கிப் போகும்.

சுய பொருளாதாரத்தை நம்பியிருக்கவேண்டிய காலமாக இது இருக்கின்றது. தற்போது பார்த்தால் இறக்குமதிகளை குறைத்துக் கொண்டு வருகின்றதான நிலைப்பாடு இருக்கின்றது. அவ்விதமான நிலையில் ஏற்றுமதியை ஊக்குவிக்கின்றவர்களாகவும், அதேவேளை எமது சுய தேவைகளை நிறைவு செய்பவர்களாகவும் இருப்பதற்கு உணவு உற்பத்தி அவசியமானதாக அமைந்திருக்கின்றது.

அந்த வகையில் உணவு உற்பத்தியை மேற்கொள்கின்ற வகையில் அமைந்த இந்த உற்பத்தி கிராமம் எனும் செயற்திட்டம் தொடர்ந்து சிறப்பாக முன்னெடுக் கப்பட்டு, அனைவரது வாழ்வாதாரம் சிறப்புறவும், மாவட்டத்தின் பொருளாதாரம் வளம்பெறவும் வேண்டும் என்று வாழ்த்துகின்றேன் - என்றார். (ஐ-6)

*கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில்*

# குடிதண்ணீர் இன்றி மக்கள் பாதிப்பு

முல்லைத்தீவு.ஜூலை 9

தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக முல்லைத்தீவு கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் வசிக்கும் 65 வரையான குடும்பங்கள் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் தற்போது 150 இற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தோர் வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த கிராமத்தில் பத்துக்கும் மேற்பட்ட பொதுக் கிணறுகள் மற்றும் குழாய்க்கிணறுகள் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டன.

இதில் கூடுதலான கிணறுகள் தண்ணீர் இன்றிக் காணப்படுகின்றன. அத்துடன் குழாய்க்கிணறுகளும் பழுதடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

இந்த நிலையில் குறித்த பிரதேசத்தில் 65 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இங்குள்ள குழாய்க் கிணறுகள் மற்றும் கிணறுகளை சீரமைத்து தருமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்த போதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை - என்றனர். (ஐ-113)





# சமுர்த்தி 'நிவச' வீடமைப்பு பயனாளியிடம் கையளிப்பு

மன்னார், ஜூலை 9

ஜனாதிபதியின் சிந்தனையில் உருவாக்கப்பட்ட சௌபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ் மன்னார் பிரதேச செயலக பிரிவில் சாந்திபுரம் பகுதியில் 6 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும் பயனாளர்களின் பங்களிப்பிலும் அமைக்கப்பட்ட வீடு வைபவ ரீதியாக உரிய குடும்பத்திடம் கையளிக்கப்பட்டது.

மன்னார் நகர் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், மேலதிக செயலர் சிவபாலன் குணபாலன், மன்னார் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.அலியார், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி வங்கி முகாமையாளர், சாந்திபுரம் சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சமுர்த்தி 'சிப்தொர' திட்டத்தின் கீழ் சாந்திபுரம் பகுதியில் வசிக்கும் 5 மாணவர்களுக்கு 10 மாதங்களுக்கு தேவையான கல்வி ஊக்குவிப்புத் தொகையும், சுயதொழில் முனைவோர் இருவருக்கு கடற்றொழில் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு என தலா ஒரு லட்சம் ரூபா வாழ்வாதார நிதி உதவியும் வழங்கப்பட்டன. (ப-56)

# சமுர்த்தி பயனாளிக்கு புதிய வீடு கையளிப்பு

வவுனியா,ஜூலை 9

சமுர்த்தி சௌபாக்கியா வாரத்தை முன்னிட்டு பயனாளி ஒருவருக்கு புளியங்குளம் பகுதியில் 16 லட்சம் பெறுமதியான புதிய வீடொன்று கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் வவுனியா மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் திருமதி பத்மறஞ்சன், கிராம அலுவலர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்து கொண்டனர். வவுனியா மாவட்ட சமுர்த்தி திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் வழங்கப்பட்ட 6 லட்சம் ரூபா நிதி மற்றும் நன்கொடையாளர்களின் உதவியுடன் இந்த வீடு அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-110)





# சட்டவிரோத மணல் அகழ்வு; சந்தேகத்தில் மூவர் கைது

கிளிநொச்சி.ஜூலை 9

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று வாகனங்களுடன் அதன் சாரதிகள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

இரரணுவத்தினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஒரு டிப்பர் வாகனம் மற்றும் இரு உழவு இயந்திரங்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

வாகனங்கள் சாரதிகள் கைது செய்யப்பட்டு தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். சந்தேக நபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-113)

# பாலைப் பழம் பிடுங்கியவர்களின் கத்தி பறிக்கப்பட்டமை ஏற்கமுடியாத செயல்

## பூநகரி பிரதேச சபை உறுப்பினர் கண்டனம்

கிளிநொச்சி.ஜூலை 9

பாலைப் பழம் பிடுங்கியவர்களின் கத்திகளை வனவளத் திணைக்களத்தினர் எடுத்துச் சென்றமையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று பூநகரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

பூநகரி வீதியில் ஜெயபுரத்தைச் சேர்ந்த மக்கள் பாலைப் பழம் பிடுங்கிக் கொண்டிருந்த போது அவ்விடத்துக்கு வருகைதந்த வனவளத் திணைக்களத்தினர் பாலைப் பழம் பிடுங்க வேண்டாம் எனக் கூறி அவர்களின் கத்திகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்கின்ற கூடுதலான குடும்பங்கள் பொருளாதார நிலைமை காரணமாக பாலை மரங்களின் கிளைகளை வெட்டி பழம் பிடுங்குவார்கள். இப்பழத்தை வற்றலாக மாற்றுதல், பாணி காய்ச்சுதல், வியாபாரம் செய்தல் என்பது காலம் காலமாக இடம்பெற்று வருகிறது. பாலை மரங்களின் கிளைகளை வெட்டுதல், மரங்களை வெட்டுவதாக அமையாது. ஜெயபுரம் மக்கள் பாலைப் பழம் பிடுங்கிக் கொண்டிருந்த போது அம்மக்களின் கத்திகளை வனவளத் திணைக்களத்தினர் எடுத்துச் சென்றமையை ஏற்றுக் கொள்ள முடியாது. பூநகரி பிரதேசத்தில் மரங்களை களவாக வெட்டிச் செல்வோர் மீது நடவடிக்கை எடுக்காத வனவளத் திணைக் களத்தினர் தமது குடும்ப பொருளாதார நிலைமை காரணமாக பாலைப் பழம் பிடுங்கச் சென்றவர்களின் கத்திகளை எடுத்துச் சென்றமை கண்டனத்துக்குரியது - என்றார். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை விவசாயிகளைப் புறக்கணித்து செல்வந்தர்களுக்கு அரச காணிகள்

## பெரியமடு கிராம அபிவிருத்திச் சங்கம் குற்றச்சாட்டு

**மன்னார், ஜூலை 9**

**மன்னாரில் பெரியமடு சன்னார் பகுதி ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்படாத அரச காணிகள் செல்வந்தர்கள் சிலருக்கு வழங்கப்படுகின்றது என்று பெரியமடு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் குற்றம் சாட்டியுள்ளார்.**



இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

நாங்கள் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இன்று வரை பெரியமடு சன்னார் கிராமத்திலேயே வாழ்ந்து வருகின்றோம். நாம் வசிக்கும் பகுதியில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் அரச காணிகள் இருந்தும் எமக்கென அரை ஏக்கர் விவசாயக் காணிகள் கூட இல்லை.

வாழ்வாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் எங்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. இங்கு அரச காணிகளை சில அரச அதிகாரிகளோடு சேர்ந்து வசதி படைத்தவர்களும் அபகரித்துக் கொள்கின்றனர்.

இந்தச் செயற்பாட்டுக்கு சில அரச அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்கள் என்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாக உள்ளது.

எமது கிராம பகுதியில் 2011ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்த பின்னர் வடக்கு காணி ஆணையாளர் ஊடாக எமது பிரதேச செயலாளர் கேதீஸ்வரனுக்குத் தெரியப்படுத்தி இருந்தோம் அதற்கு எமக்கு எந்த ஒரு பதிலும் கிடைக்கவில்லை காரணம் அங்குள்ள செல்வந்தர்களுக்கு முன் ஒரு சில அரசு அதிகாரிகள் நிற்கின்றார்கள். அந்த அரச அதிகாரிகளால் எங்களுடைய வாழ்வாதாரமும் பிள்ளைகளின் கல்வியும் சீரழிந்து கொண்டிருக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் அமைச்சராக இருந்த போது அவரால் சன்னார் பகுதியில் 800 ஏக்கருக்கு மேற்பட்ட காடுகளை அழித்து அங்கு வீடுகள், பாடசாலை, வழிபாட்டுத்தலங்கள் மற்றும் மருத்துவமனை போன்றவை கட்டிக்கொடுக்கப்பட்டது. அவை இன்று ஆடு, மாடுகள், காட்டு விலங்குகளின் தங்குமிடங்களாக மாறியுள்ளன. ஆனால் நீண்ட காலமாக அப்பகுதியில் வசித்து வரும் எமது வாழ்வாதாரத்துக்கும், எமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காகவும் அரை ஏக்கர் விவசாயக் காணியைத் தருமாறு நாங்கள் கெஞ்சிக் கேட்ட போதும் அரச அதிகாரிகள் அதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றனர் காரணம் அங்குள்ள ஒரு சில செல்வந்தவர்களுக்கு காணி உறுதிகள் உள்ளன என்று அதிகாரிகளே கூறுகின்றனர்.

குறித்த காணிகளை அபகரிப்புச் செய்து கொண்டிருக்கும் சில செல்வந்தர்களுக்கு ஆதரவான ஒரு சட்டத்தரணி எம்மை அணுகி 15 லட்சம் ரூபா தருவதாகவும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக இருப்பவர் ஒரு மாதம் பதவி விலக வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அந்த அரச காணிகள் முழுவதும் ஏழை விவசாயிகளுக்குச் சேர வேண்டியவை- என்றனர். (ப-213)

---

# 38 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

கிளிநொச்சி,ஜூலை 9

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட பளை பிரதேசத்தைச் சேர்ந்த 38 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

பளை பொலிஸ் பொறுப்பதிகாரியால் இந்த உதவிப் பொருள்கள் பொலிஸ் நிலையத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-113)

---

# தடுப்பூசி வழங்கலில் சுகாதார தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்

## மன்னார் நகர சபை உறுப்பினர் கோரிக்கை

மன்னார்,ஜூலை 9

மன்னார் மாவட்டத்தில் உள்ள சுகாதார தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும் என்று மன்னார் நகர சபை உறுப்பினர் ச.மைக்கல் கொலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது மன்னார் மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் சுகாதார தொழிலாளர்கள் மற்றும் அலுவலக சுத்திகரிப்பாளர்களுக்கு தடுப்பூசி வழங்க இதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.எனவே அவர்களுக்கு வயது வேறுபாடு இன்றி தடுப்பூசி வழங்க சுகாதார துறை அதிகாரிகள் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து வீடுகள், மருத்துவமனைகள், அரச திணைக்களங்கள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தும் பொது இடங்கள் அனைத்துக்கும் சென்று கழிவுகளை அகற்றும் சுகாதார தொழிலாளர்கள் மீது கவனம் செலுத்தாமல் இருப்பது மிகவும் கவலையை ஏற்படுத்துகின்றது.

எனவே எதிர்வரும் காலங்களில் அவர்களை முன்னுரிமைப்படுத்தி தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவாக கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (ஐ-56)

---

# மன்னார் பொது மருத்துவமனைக்கு குருதிமாற்று இயந்திரம் கையளிப்பு

மன்னார்,ஜூலை 9

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு 23 மில்லியன் ரூபா பெறுமதியான குருதி மாற்று இயந்திரம் கையளிக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியாக செயற்படுத்தப்பட்டு வரும் 'ஜன சுவய' திட்டத்தின் 20 ஆவது கட்டமாக மன்னார் மருத்துவமனைக்கு குறித்த இயந்திரம் கையளிக்கப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் வைத்து மன்னார் மாவட்ட மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் கே.செந்தூர்பதிராஜாவிடம் நன்கொடையாக வழங்கப்பட்டது.

நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் மூத்த துணைத் தலைவர் ராஜித சேனாரத்ன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான , செல்வம் அடைக்கலநாதன்,எஸ்.வினோ நோகராதலிங்கம், எம்.ஏ.சுமந்திரன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் சாணக்கியன் இராசமாணிக்கம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (ஐ-56)



---



# பல்லவராயன்கட்டுச் சந்தியில் புதியபாலம் அமையவேண்டும்

## பூநகரி பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 9

கிளிநொச்சி பூநகரி பல்லவராயன் கட்டுச் சந்தியில் புதிய பாலம் அமைய வேண்டும் என பூநகரி பிரதேச சபை உறுப்பினர் அ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பூநகரியின் கரியாலைநாகபடு வான்குளம், பல்லவராயன்கட்டுக் குளம் ஆகிய இரு குளங்களும் வான் பாய்கின்ற போது மன்னார் யாழ்ப்பாண வீதியில் பல்லவராயன்கட்டுச் சந்தியில் ஏ32 வீதியை குறுக்கறுத்துப் பாய்வது வழமை. ஏ32 வீதியின் சீரமைப்பின் போது பல்லவராயன்கட்டு பொது அமைப்புகளிடம் ஆலோசனைகளைக் கேட்காமல் பல்லவராயன்கட்டுச் சந்தியில் சிறிய மதகு அமைத்து வீதியைச் சீரமைத்துள்ளனர். இதனால் இரு குளங்களின் வெள்ளமும் வீதியைக் கடந்து செல்ல முடியாமல் 100 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலத்தை மூடிப் பாய்கின்ற நிலைமை காணப்படுகின்றது. பல்லவராயன்கட்டுச் சந்தியில் அமைய வேண்டிய பாலம் முழங்காவில் பக்கமாக ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்து விட்டது. தற்போது பல்லவராயன்கட்டுச் சந்தியில் ஏ32 வீதியைப் பிளந்து 20 அடி வரையான புதிய பாலம் அமைக்கப்பட்டால் மழை காலத்தில் பல்லவராயன்கட்டு வயல் நிலங்களில் மழை வெள்ளம் தேங்காத நிலைமை உருவாகும். இதற்கான நடவடிக்கையை வீதிச் சீரமைப்புகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் எடுக்க வேண்டும். இதனை விட ஒரு அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்கும் போது அக்கிராம மக்களின் ஆலோசனைகள் பெறப் படவேண்டும் - என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மாத்தளையில் இரு பகுதிகள் முடக்கம்

கொழும்பு,ஜுலை 9
மாத்தளை மாவட்டத்தில் இரண்டு கிராமங்கள் நேற்றுக்காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் பொகஹாகொடுவ கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட அகலவத்த மற்றும் அரஸ்கம கிராமங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.
அதேவேளை மாத்தளை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 7 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

## நாவற்குழி பிரதேசத்தில் 8 குடும்பங்கள் தனிமையில்

நாவற்குளி,ஜுலை 9
நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த 8 குடும்பங்கள் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரால் தனிமைப்படுத்தப்பட்டனர். நாவற்குழிப் பகுதியில் கடந்த ஆறாம் திகதி சுகாதார பிரிவினரால் எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் மூவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப் பட்டது. இதனையடுத்து இவர்களுடன் தொடர்பைப் பேணிய 8 குடும்பங்களைச் சேர்ந்தோர் தனிமைப்படுத்தப்பட்டனர்.(ஐ-9)


## கொரோனாத் தொற்றுடன் தடுப்பூசியைப் பெற்ற நபர்

### மீகொடவில் குழப்பம்

கொழும்பு,ஜுலை 9
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவரும், தனிமைப்படுத்தப்பட்ட நபர் ஒருவரும் மீகொடையில் உள்ள தடுப்பூசி மையத்தில் திருட்டுத்தனமாக தடுப்பூசி பெற்றுள்ளனர் என்று மீகொட பொதுச் சுகாதார ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.
பானலுவப் பகுதியைச் சேர்ந்த நபருக்கு கடந்த 2ஆம் திகதி தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அவரது குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டனர்.
இதற்கிடையில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபரும், தனிமைப்படுத்தப்பட்ட நபரும் கொரோனாத் தடுப்பூசியை பெற்றுள்ளனர். இதனால் தடுப்பூசி போட்டவர்கள் மற்றும் பெற்றுக்கொள்ள வந்தவர்கள் என அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் மீதும் வழக்குத் தொடரப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

## பைஸர் தடுப்பூசி இனி ஏற்றப்படாது?

கொழும்பு,ஜுலை 9
அஸ்ராஜெனகாவின் முதலாம் டோஸைப் பெற்றவர்களுக்கு 2 ஆம் கட்டமாக பைஸர் தடுப்பூசி செலுத்தும் திட்டம் நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளது.




அடுத்த வாரத்தில் 1.4 மில்லியன் அஸ்ராஜெனகா தடுப்பூசிகள் இலங்கைக்குக் கிடைக்கவுள்ளன. இதன் காரணமாகவே பைஸர் தடுப்பூசி செலுத்தும் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இலங்கையில் அஸ்ராஜெனகாவின் முதலாம் டோஸைப் பெற்றவர்களுக்கு, இரண்டாம் கட்டமாக அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பைஸர் தடுப்பூசி செலுத்தும் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.4)

## வெளிநாட்டவர்களுக்கான கட்டுப்பாடுகள் மாற்றம்

கொழும்பு,ஜுலை 9
**வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தருவோருக்கான கட்டாய தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகள் மீண்டும் மாற்றப்பட்டுள்ளன.**

அதற்கமைவாக கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸையும் பெற்றிருந்தால், அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும். அவர்களுக்கு தொற்று இல்லையெனில் தனிமைப்படுத்தலுக்கு உட்பட தேவையில்லை என்று சிவில் விமான சேவைகள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.
இதனுடாக, வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புகின்றவர்களுக்கான கட்டாய தனிமைப்படுத்தல் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது. அதேவேளை தொற்று உறுதி செய்யப்படும் நபர்கள் தனிமைப்படுத்தப்படுவர். தடுப்பூசியின் இரண்டு டோஸையும் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு இந்த நடைமுறை செல்லுபடியாகாது. அவ்வாறே, இலங்கைக்குள் பிரவேசிக்க தடைவிதிக்கப்பட்டுள்ள நாடுகளின் பிரஜைகள் மற்றும் அந்த நாடுகளுக்கு கடந்த 14 நாள்களுக்குள் சென்று திரும்பியவர்கள் இந்த நடைமுறைக்குள் உள்வாங்கப்பட மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

## கடற்றொழிலில் முரண்பாடு காதைக் கடித்து கடலில் துப்பிய நபர்

கொடிகாமம், ஜுலை 9
கடற்றொழிலுக்கு சென்றவேளை ஏற்பட்ட முரண்பாட்டால், ஒருவரின் காதைக் கடித்து கடலில் துப்பியுள்ளார் மற்றொருவர். பதிலுக்கு மற்றையவரின் தலையை அடித்து உடைத்தார் காதுகடிபட்டவர்.
தற்போது இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.
இந்தச் சம்பவம் சுங்குப்பிட்டி பாலத்தடியில் நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-159)

## 70 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

சாவகச்சேரி, ஜுலை 9
மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவில் கற்கும் 70 மாணவர்களின் குடும்பங்களுக்கு நேற்றுமுன்தினம் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.
புலம்பெயர் நாட்டில் (சுவிஸ்) வதியும் நலன்விரும்பியால் வழங்கப்பட்ட நிதி உதவியில் கொள்வனவு செய்யப்பட்ட. உலர் உணவுப் பொதிகள் வித்தியாலய அதிபர் இ. நாகேந்திரனால் மாணவர்களின் பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்டன. (ஐ-9)



## டெல்டா திரிபு வைரஸ் தொற்றுடன் ஆயிரக்கணக்கானோர் சமூகத்தில்?

### சந்தேகம் வெளியிட்டது சுகாதாரத் திணைக்களம்

கொழும்பு,ஜுலை 9
டெல்டா திரிபு வைரஸ் தொற்று இலங்கையில் பரவவில்லை என்று எம்மால் கூற முடியாது. எனினும் ஒரு தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்டால், ஆயிரக்கணக்கானவர்கள் சமூகத்தில் இருக்கக்கூடிய சாத்தியம் உண்டு.
இவ்வாறு சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் பயணத்தடை காரணமாக கொரோனாத் தொற்றாளர்கள் குறைந்து விட்டனர் என்று கூற முடியாது. பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகளைப் பெறுக்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளது. இதனால் தொற்றாளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தற்போது பி.சி.ஆர் பரிசோதனை 9 ஆயிரம் வரையில் குறைந்துள்ளது.
மீளவும் இந்த எண்ணிக்கை 15 ஆயிரமாக உயர்த்தப்பட்டது. இந்த எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம் 08 . 05 . 1957



மறைவு 09 . 06 . 2021

## அமரர் இவாஞ்சலின் எழில் வானம்பாடி சாள்ஸ்

(இளைப்பாறிய ஆசிரியை)

*"ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது (தி.பா.84 : 1)*

அன்புத் தந்தையே இறைவா! நீர் உம்மிடம் அழைத்துக் கொண்ட உமது அன்பு மகள் இவாஞ்சலின் எழில் வானம்பாடி சாள்ஸ் என்பவரின் விசுவாசம் நிறைந்த வாழ்விற்காகவும் நீர் அளித்த கொடைகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம். இவரின் பாவங்களையும், குறைகளையும் மன்னித்து நிலைவாழ்வையும் புனிதர்களின் தோழமையுள்ள உறவையும் கொடுத்தருள உம்மை மன்றாடுகின்றோம் ஆமென்.

இவரின் இழப்பால் துயருற்று இருந்த வேளை எம்மோடு உடனிருந்து ஆறுதல் கூறிய கியூடெக் - கரிதாஸ் நிறுவன இயக்குனர் தந்தை, பணியாளர்கள், புனித மரியன்னை பேராலய, புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தையர்கள், புனித மடுத்தினார் குருமட அதிபர் மற்றும் உதவி அதிபர், ஆசிரிய சமூகம், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண நீர்பாசன திணைக்களப் பிரதிப் பணிப்பாளர், வீடமைப்பு அதிகார சபை மாவட்ட முகாமையாளர், பணியாளர்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக ஆறுதல் கூறியவர்கள், மலர்வளையம் வைத்தவர்கள், உள்ளூர் மற்றும் வெளியூர் உறவுகள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் குடும்பத்தின் சார்பில் நன்றி கூறுகின்றோம்.

**96,பழைய பூங்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

# சாவகச்சேரி நகராட்சிமன்றம் ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சிமன்றத்திற்குட்பட்ட வட்டாரம்: 10. முருகமூர்த்தி கோயில் ஒழுங்கை. 55 / 4 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கார்த்திகேசு cl/by:- இந்துராஜா என்னும் பெயரில் ஆதனவரிப்பெயரேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி வடக்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளையும் பெண் திலகவதிப்பிள்ளையும் பிரசித்த நொத்தாரிசு வழக்கறிஞர் கதிர்காமசேகரன் முகதாவில் 1968.12.09 ஆம் திகதியிடப்பட்ட 13577 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் அவ்வூர் வேலுப்பிள்ளை இராசரத்தினம் என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

பின்னர் சாவகச்சேரி வடக்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளையும் பெண் திலகவதிப்பிள்ளையும் வேலுப்பிள்ளை இராசரத்தினமும் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு வல்லிபுரம் சின்னையா முகதாவில் நிறைவேறிய 1987.03.08 ஆம் திகதியிடப்பட்ட 1458 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் சாவகச்சேரி வடக்கு முருகன் கோவிலடி நடராசா இந்துராசாவுக்கும் பெண் இராசேஸ்வரிக்கும் அறுதியாக வழங்கியுள்ளனர்.

சாவகச்சேரி வடக்கு முருகன் கோவிலடி நடராசா இந்துராசாவும் பெண் இராசேஸ்வரியும் பிரசித்த நொத்தாரிசு வல்லிபுரம் சின்னையா முகதாவில் நிறைவேறிய 1988.08.29 ஆம் திகதி திகதியிடப்பட்ட 1555 இலக்க அறுதி உறுதி மூலம் வேலுப்பிள்ளை இராசரத்தினத்துக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்.

பின்னர் சாவகச்சேரி வடக்கு வேலுப்பிள்ளை இராசரத்தினமும் பெண் சிவபாக்கியமும் பிரசித்த நொத்தாரிசு வல்லிபுரம் சின்னையா முகதாவில் 1990.03.05 ஆம் திகதியிடப்பட்ட 1659 ஆம் இலக்க அறுதி உறுதிமூலம் நடராசா இந்துராசாவுக்கும் பெண் இராசேஸ்வரிக்கும் அறுதியாக வழங்கியுள்ளனர்.

**ஆதனவிபரம்:**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோயிற்பற்று சாவகச்சேரி இறை "சங்கம் சீமாவளவு கொட்சாட்டி" நிலப்பரப்பு மூன்று (03). இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் V.A.தங்கமயில் அவர்களால் 04.08.2020 ஆம் திகதியில் அளந்து வரைந்த 5682 ஆம் இலக்க அளவைப்படத்தின்படி நிலப்பரப்பு 3 குளி 09.80. இதற்கு எல்லை.

வடக்கு : தம்பையா குருக்கள் வீரபத்திரக்குருக்களுக்கும் மறுபேருக்குரிய ஆதனம்
கிழக்கு : பேரம்பலம் பெண் கனகம்மாவுக்குரிய ஆதனம்
தெற்கு : விஸ்வலிங்கம் பூரணத்திற்குரிய ஆதனம்
மேற்கு : வேலுப்பிள்ளை மகேஸ்வரனுக்குரிய ஆதனம்

தற்போது நடராசா இந்துராசாவும் பெண் இராசேஸ்வரியும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்ட பூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காதபட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப்பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிவமங்கை இராமநாதன்**
**தவிசாளர்**
**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**

# மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 02 . 1941



இறப்பு 08 . 07 . 2021

## திரு.வல்லிபுரம் குமாரசாமி

**(தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவு சங்க முன்னாள் முகாமையாளர்)**

தம்பிளாவத்தை மல்லாகத்தை பிறப்பிடமாகவும், 10ஆம் கட்டை மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தெல்லிப்பளை பல நோக்கு கூட்டுறவு சங்க முன்னாள் முகாமையாளர் திரு. வல்லிபுரம் குமாரசாமி அவர்கள் நேற்று (08.07.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அரியமலரின் அன்புக் கணவரும், வல்லிபுரம் தில்லைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காண்டீபன் (கனடா), பகீரதி (நோர்வே), சுதர்சனன் (லண்டன்), சாந்தரூபன் (LOLC) ஆகியோரின் அன்புத் தந்தையும், புவியரசி, சுதாபரன், சுஜிதா ஆகியோரின் மாமனாரும், குணசிங்கம், சண்முகசுந்தரம் (அமரர்), கனகம்மா, கனகசோதி, திலகவதி, அம்பிகை (அமரர்), தங்கராசா, கணேசு, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஓவியா, இனியா, தருண், சஜனின், பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.07.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, மாவிட்டபுரம் தச்சன்காட்டு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**+94 77 008 8165**
**+94 77 386 7074**

**தகவல்:**
**மகன் (சாந்தரூபன்)**

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 04 . 1935



மறைவு 08 . 07 . 2021

## கந்தையா கனகரத்தினம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகரத்தினம் அவர்கள் நேற்று (08.07.2021) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தெய்வானை தம்பதியரின் மகனும், வைத்திலிங்கம் (மடுவார்) சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புக் கணவரும், மங்கையற்கரசி, காலஞ்சென்ற மகேந்திரன், கணேசலிங்கம், சிவநாதன் (லண்டன்), மனோகரன் (பிரான்ஸ்), கிருபாகரன் (லண்டன்), மஞ்சுலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசு, ரதி, மகாலட்சுமி (லண்டன்), சுசிலாதேவி (பிரான்ஸ்), செல்வமலர் (லண்டன்), கனகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஸ்தூரி-சதீபன், அஜந்தன், அனுசன், மயூரி-கோகிலன், யதுசா-கலாச்சந்தர், சுரேகா, டிசாந், விதுசன், மதுசன், கயந்தன், பிரியா, கயூரன், கீர்த்தனா, கீர்த்திகன், சாருயன், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், யனோஷா, வினோஸ், நிலா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கொக்குவிலில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலணை சாட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.06, ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் மேற்கு கொக்குவில்.**
**077 950 4253, 077 073 0381**

**தகவல்:**
**கணேசலிங்கம்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வட்டுக்கோட்டை தேவாலயமும் அதன் கட்டடக் கலையும்!

விதுஷா சோமசுந்தரம்
கலைத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணத்திலிருந்து 13.3 கிலோ மீற்றர் தொலைவில் வட்டுக்கோட்டை கிராமத்தில் புனித தோமஸ் தேவாலயம் அமைந்துள்ளது. இது யாழ்ப்பாணக் கல்லூரியின் எதிரே அமைந்துள்ளது. 'வட்டுக்கோட்டை' ஒல்லாந்தர் மற்றும் அமெரிக்க மிசன் காலத்தில் 'பற்றிக் கோட்டா' என அழைக்கப்பட்டது. இந்தத் தேவாலயம் போர்த்துக்கேய இயேசு சங்கத்தினரால் 1626இல் கட்டப்பட்டது. பின்னர் டச்சுக்காரரால் 1678இல் பொறுப்பேற்கப்பட்டது. பிரதான வாயில் கதவு நிலைக்கு மேலாக எழுதப்பட்டுள்ள வாசகம் 'இந்த ஆலயம் டச்சு கொமாண்டர் லேறன்ஸ் பைல் என்பவரால் 1678இல் கட்டப்பட்டது' என்றவாறாக அமைந்துள்ளது.

இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றை எழுதிய பெரினியோவா என்பவர் தேவ மாதாவுக்காகப் போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட தேவாலயத்தை மாற்றியமைத்தே மேற்படி கட்டுமானம் உருவாக்கப்பட்டது என்று குறிப்பிடுகிறார்.


அவரது குறிப்புகளின்படி வட்டுக்கோட்டையில் 1640 களில் மேற்படி தேவாலயம் கட்டப்பட்டது என்றுள்ளது. பிலிப்ஸ் பல்தேயஸ் தனது இலங்கைத் தீவு பற்றிய நூலில் 1672 மேற்படி கட்டுமானத்தை விவரித்துள்ளார். இந்தத் தேவாலயம் யாழ்ப்பாணத்தின் அமெரிக்க மிசன், தென்னிந்திய திருச்சபைக்குள் இருக்கும் தேவாலயங்கள் எல்லாவற்றிற்குமான பேராலயமாக காணப்படுகின்றது.

தேவாலயத்தின் முகப்பு பகுதியானது மிகவும் எளிமையான தனத்துடன் கேத்திர கணிதப் பாங்கில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதாவது கூரையமைப்பால் உருவாகும் முக்கோணமும் சதுர அல்லது செவ்வகப் பரப்பு இணைந்த முகப்பு பகுதி சுவரால் அடைக்கப்படுவதால் தோன்றும் சுவர் பகுதியின் மூன்று விளிம்புகளிலும் கேத்திர கணிதப்பாங்கான சிகரங்கள் அமைந்துள்ளன. உச்சியில் மூன்று பிரமிட் வடிவங்களை கொண்ட மணிக்கோபுரம் காணப்படுகிறது. மணி சுவரிலுள்ள அரைவளைவான வெளியினுள் தொங்கவிடப்பட்டுள்ளது. கனவுரு வ்டிவத்துக்கு மேல் மூன்று கூம்பு வடிவிலான அமைப்பை ஒத்த வடிவத்திற்கு மேல் சிறிய கோள வடிவத்தை ஒத்த சிறிய அமைப்பு அடுக்கு போல் காணப்படுகிறது.

நடுப்பகுதியில் உள்ள கூம்பு மற்ற இரு கூம்புகளைவிட சற்று உயரமானதாக உள்ளது. முழுமையான முகப்பு பகுதியினை நோக்குமிடத்து முக்கோண வடிவத்தின் இரு சரிவுச் சுவர் முனைகளிலும் சதுரமான சற்று உயர்ந்த அமைப்புடன் அதற்குமேல் சதுர அடி கூம்பகங்கள் காணப்படுகின்றன. இவ் இரு புறங்களிலிருந்து வரும் கூம்பகங்களிலிருந்து சரிவுச் சுவர் மேல் நோக்கிச் சென்று மேற்குறிப்பிட்ட கனவுரு வடிவிலான மணிக் கோபுரத்துடன் இணைகின்றது.

முகப்புப் பகுதியில் உள்ள பிராதன நுழைவாயிலில் கதவு நிலைக்கு மேற்பகுதியில் சுவருடன் இணைந்தவாறு செவ்வக வடிவிலான அமைப்புக்கு மேல் முக்கோணப் பாங்கான பெடிமன் அமைப்பை ஒத்த வடிவம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மூன்று முனைப்பகுதிகளிலும் சதுர வடிவிலான சிறிய அமைப்புக்குமேல் சதுர அடி கூம்பகம் அதற்கு மேல் சிறிய கோளவடிவிலான அமைப்புக்கு மேல் சிறிய முக்கோணப்பாங்கான சிறிய முனை காணப்படுகிறது. ஒரு வகையில் இத்தேவாலயத்தின் முகப்பு எளிமையான முக்கோணப் பாங்கான கேத்திர கணித தனத்துடன வடிவமைக்கப்பட்டதை கட்டடக்கலை ரீதியாக உருவவியல் ரீதியாக நோக்க முடிகின்றது.



புனித தோமஸ் தேவாலயத்தின் முகப்பினை ஒத்தே பிற்காலத்தில் வரும் அமெரிக்க மிசன் தேவாலயங்களின் முகப்புக்கள் அமைக்கப்பட்டன.

இதன் தளவடிவமைப்பானது நீள் சதுர வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இத் தேவாலயத்தின் நீளம் 161 அடி 3 அங்குலமும் அகலம் 55 அடி 6 அங்குலம் கொண்டுள்ளது. நடுக்கூடத்தையும், சிறகு மாடத்தையும் பிரிக்கக் கூடிய வகையில் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக 24 உருளைத் தூண்கள் காணப்படுகின்றன நான்கு தூண்கள் அரைவாசி சுவருடன் இணைந்த வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

அரைவட்ட வளைவுகள் தூண்களுடன் இணைந்த வகையில் தொடுக்கப்பட்டுள்ளது. அரைவட்ட வளைவுகளுடன் கூடிய ஒவ்வொரு இரண்டு தூண்களுக்கு இடையில் 14 அடி 5 அங்குலம் இடைவெளி உள்ளது. உருளைத் தூண் ஒன்றின் விட்டம் 3 அடி 6 அங்குலம் ஆகும். நல்லூரில் உள்ள புனித ஜேம்ஸ் தேவாலயத் தூண்களுடன் ஒப்பிடக் கூடிய விதத்தில் உள்ளது. உள்வெளியின் பலி பீடப் பகுதியினை அண்மித்த பகுதியில் மூன்று சோடி தூண்கள் நடுக்கூடத்தில் கூர்வளைவிலான பட்டிகளால் கூரையை இணைக்கும் வகையில் காணப்படுகிறது.

பலிபீடப் பகுதியின் மேடை 28 அடி நீளமும் 27 அடி 4 அங்குல அகலமும் கொண்டமைந்துள்ளது. குறைந்தது 2 ஆயிரம் பேரை உள்ளடக்கக் கூடியதான அமைப்பை இன்று பெற்றுள்ளது. இந்த ஆலயம் புனித தோமஸ் பேராலயம், வட்டுக்கோட்டை என்ற பெயராலேயே அழைக்கப்பட்டது.

சுருங்கக்கூறின், போர்த்துக்கேயர் கட்டிய ஆலயம், டச்சுக்காரரால் அவர்களது ஆளுகைக்குக்கீழ் கொண்டுவரப்பட்டபோது, ஆலயமும் வடிவத்தைப் பெற்றுக் கொண்டது. 2026ஆம் ஆண்டு இந்த ஆலயம் 400 வருடங்களைப் பூர்த்தி செய்கின்றது.


தேவாலய வெளியில் ஒளி மற்றும் இருள் கசியும் வகையில் 17 ஜன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரைவட்ட வளைவுடன் கூடிய கண்ணாடியிலான ஜன்னல்கள் உள்ளன. ஒவ்வொரு ஜன்னலும் 8 அடி 4 அங்குல உயரத்துடன் 5 அடி அகலத்துடன் காணப்படுகிறது. 6 கதவுகள் 6 அடி 6 அங்குல அகலத்துடன் 11 அடி 2 அங்குல உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. எந்த விதமான அலங்காரமுமற்று எளிமையான கேத்திர கணித வடிவங்களில் கதவு வடிவமைக்கப்பட்டுள்ளது.

போர்த்துக்கேய மூலம் என்பதற்கு ஏற்ப சுவர் 3 அடி 7 அங்குல தடிப்பைக் கொண்டுள்ளது. போர்த்துக்கேயர் தேவாலய மற்றும் வீட்டுக்கட்டடங்களின் ஊடக நுட்ப முறையில் சுவரானது முருங்கைக் கற்களை பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் ஒப்பமற்ற நெளிவு சுழிவானவற்றை ஒப்பமாக்காமல் உள்ளூரில் உள்ள சுண்ணாம்பு கற்களை அரைத்து சாந்தினைச் செய்து ஒட்டிகல் தெரியாமல் இருக்க பூசுவர். இவ்வாறு அதிகமாக சுண்ணாம்பு பூசி ஒட்டி அழுத்துவதால் போர்த்துக்கேய கட்டடங்களின் சுவர் தடித்த, மொத்தமான பண்பைக் கொண்டுள்ளது எனலாம்.

கூரையானது ஓட்டினால் வேயப்பட்டு இராசமல்லுக் கூரையமைப்பு கொண்டு காணப்படுகின்றது. உள்வெளியில் கட்டடக் கூறுகளில் பயன்பாட்டின் பொருட்டு தளபாடங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. குறிப்பாக பிரசங்கமேடை, பாதிரியார் அமர்வதற்கான கதிரைகள், வழிபாடு செய்வோர் அமர்வதற்கான ஆசனங்கள், ஞானஸ்தான பகுதி மரத்தால் ஆன அலங்கார வேலி காணப்படுவதுடன் விரிவுரை ஆற்றுவதற்கான தளபாட அமைப்பில் கழுகு உருவம் அலங்காரத்துடன் செதுக்கப்பட்டுள்ளது.

இந்த தேவாலயம் அமெரிக்க மிசன் பாவனையில் உள்ள தேவாலயங்களில் தனித்துவமான அழகியல் பூர்வமானதாக அமைக்கப்பட்டுள்ளதுடன் போர்த்துக்கேய மற்றும் ஒல்லாந்த கட்டடக்கலையின் பண்பினை வெளிப்படுத்துவதை நோக்க முடிகின்றது. கட்டடத்தின் வடிவமைப்பு ரீதியாக சங்கானை தேவாலயத்துடன் ஒத்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நீண்ட வரலாற்றுப் பின்னணியுடைய மரபுரிமையை இயன்றவரை தோற்ற உருவவியலில் மாற்றத்தை ஏற்படுத்தாது அதன் கட்டடக்கலையை பேணி காக்கும் வகையில் அமெரிக்க மிசன் தென்னிந்திய திருச்சபை செயற்பட்டு வருகின்றமை நோக்கத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 கிலோ கஞ்சாவுடன் மூவர் நேற்றுக் கைது



யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் ஊர்காவற்றுறை பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் 4 கிலோ கேரளக் கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த மூவரில் இருவர் ஊர்காவற்றுறையையும் ஒருவர் யாழ்ப்பாணத்தையும் சேர்ந்தவர்கள். (ம)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 02 . 06 . 1966



ஆண்டவன் அடியில் 09 . 07 . 2010


### அமரர் கந்தையா சிவகுமார்

ஆண்டுகள் பதினொன்று ஆயிடினும்
உன் அன்பு முகம் மறக்கவில்லை
ஈன்று உம் நினைவாய் இருந்தே
நாம் தவிக்கின்றோம் - தூண்டாமணி
விளக்காய் ஒளிவீசிப் பிரகாசித்தீர் - இன்று
வேண்டித் துதித்தே நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம், சாவகச்சேரி.

குடும்பத்தினர்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### திரு. தயாநிதி கஜேந்திரன் (இராஜா)

திதி வெண்பா

ஆண்டுமன்மத ஆனிமாதத் திங்கள் அன்று
காண்தகு அமரபக்கத் திரியோதசிதிதி தன்னில்
கஜேந்திரன் சென்றனன் விண்ணுலகம் எமை
மீளாத் துயரில் ஆழ்த்தி.

ஆடிப்பாடி மழலைகள் செய்து திரிந்த
அன்பிற்கோர் இருப்பிடமாய் அமைதியின்
உருவமாய் எம்முடன் உறவாடிய விருட்சம்
மொட்டு ஒன்று விரியமுன் கருகி வீழ்ந்து
ஆறு ஆண்டுகள் சென்றதோ
ராஜா என்று அழைப்பதற்கு நீ இல்லையடா
நீயில்லா வெற்றிடங்கள் என்றும்
வெறுமை தான்டா ராசா
உன் நினைவுகளுடன் தலைமுறைகள்
தாண்டியும் காத்திருப்போம் உனக்காக
கண்ணிரண்டும் என்றும் நீர்த்திருப்பம்.

இந்திர பிரஸ்ஷம்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

உன் நினைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
குடும்பத்தினர்.

# இலங்கை அணிக்குள் ஊடுருவியது கொவிட்


**TO தேவை**

வடமராட்சியில் கட்டட வேலைத் தளத்திற்கு உடனடியாக TO/ Site Supervisor தேவை.

077 344 4801 elankasystems@gmail.com


கொழும்பு, ஜூலை 9

இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளரான கிராண்ட் பிளவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இலங்கை அணி அண்மையில் இங்கிலாந்து சென்று விளையாடியது. தொடர்முடிவடைந்த பின்னர் இங்கிலாந்து வீரர்களுக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் வீரர்கள் 3 பேருக்கும் அணியின் உதவியாளர்கள் 4 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனால் இலங்கை அணிக்குள்ளும்கொரோனா ஊடுருவியிருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்ட நிலையில்இலங்கை அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)




தச்சந்தோப்பு
சிந்தாமணி பிள்ளையார் ஆலயம்

**கூறுவிலை கோரல்**

மேற்படி ஆலயத்தில் கீழ்வரும் திருத்த வேலைகள் செய்வதற்கான கூறுவிலைகள் அனுபவமுள்ள நிர்மாணிகளிடம் இருந்து ஆலய நிர்வாகத்தினரால் கோரப்படுகிறது.

1. ஆலய கூரை திருத்தவேலை
2. ஆலயத்திற்கு வர்ணம் பூசுதல்
3. உள் வீதி நிலத்திற்கு கருங்கல் பதித்தல், முன் மண்டபத்திற்கு தராசோ (TERRASO) பதித்தல்
4. வெள்ளிரும்பு கைப்பிடி வேலி (HAND RAUL) முன் மண்டபத்தை சுற்றி அமைத்தல்


மேற்படி வேலைகளை ஆலய நிர்வாகத்தினரிடம் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். இவ் விளம்பரம் பதிவிட்ட நாளிலிருந்து 10 நாள்களிற்குள் கூறுவிலைகள் ஆலய நிர்வா கத்தினரிடம் ஒப்படைக்கவேண்டும்.

தொடர்புகளுக்கு:
சி.முருகேசு (முகாமையாளர்) 077 612 8431
ந.கணேசமூர்த்தி (செயலாளர்) 077 786 2353

ஆலய நிர்வாகம்


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 18 . 02 . 1944



மறைவு 09 . 06 . 2021

### அமரர் இரத்தினம் கனகலிங்கம்

(முன்னாள் கிளை முகாமையாளர் நல்லூர் பல நோக்குகூட்டுறவுச் சங்கம்)

கடந்த 09.06.2021 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மரண செய்தி அறிந்து ஓடோடி வந்து இறுதிக்கிரியைகளுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அத்துடன் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 09.07.2021 வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளுக்கு நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக அனைவரையும் அழைக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்கலைக் கற்கைகளுக்கான தெரிவுப்பரீட்சை திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலை மாணி (மொழிபெயர்ப்புக் கற்கைகள்) மற்றும் உடற்கல்வி விஞ்ஞானமாணி ஆகிய கற்கை நெறிகளுக்காக 2020 / 2021 ஆம் கல்வி ஆண்டில் பயில்வதற்கு விண்ணப்பித்த மாண வர்களுக்கான நுண்ணறிவுப் பரீட்சைகள் அடுத்தவாரம் தொடக்கம் நடைபெறவுள்ளன என்று யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் உத்தி யோகபூர்வ இணையத்தளத்தில் குறிப்பி டப்பட் டுள்ளது.

கலைமாணி (மொழிபெயர்புக் கற்கைகள்) தெரிவுக்கான நுண்ணறிவுப் பரீட்சை எதிர்வ ரும் ஜூலை 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யும், உடற்கல்வி விஞ்ஞானமானி கற்கை நெறி தெரிவுக்கான நுண்ணறிவுப் பரீட்சை எதிர்வரும் ஜூலை 16 ஆம் திகதி வெள்ளிக் கிழமையும் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட் டுள்ளது.

கலைமாணி (மொழிபெயர்புக் கற்கைகள்) கற்கை நெறிக்காக விண்ணப்பித்த மாணவர் களில் ஆயிரத்து 590 பேர் தெரிவுப் பரீட்சைக் குத் தகுதிபெற்றுள்ளனர். அவர்களில் 360 பேர் விண்ணப்பக் கட்டணத்தை செலுத்திய மைக்கான வங்கிச் சிட்டையை அனுப்ப வில்லை. அத்துடன் உடற்கல்வி விஞ்ஞான மாணி கற்கைநெறிக்கு விண்ணப்பித்த மாண வர்களில் 417 பேர் தெரிவுப் பரீட்சைக்குத் தகு திபெற்றுள்ளனர். அவர்களில் 49 பேர் விண் ணப்பக் கட்டணத்தை செலுத்தியமைக்கான வங்கிச் சிட்டையை அனுப்பவில்லை.

தெரிவுப் பரீட்சைக்குத் தகுதி பெற்றுள்ளவர்க ளின் விவரங்களை www.jfn.ac.lk என்ற இணையத்தள முகவரியில் பார்வையிட முடி யும்.

தெரிவுப் பரீட்சைக்குத் தகுதிபெற்று, விண்ணப் பக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியவர்கள், தங்களது விண்ணப்பக் கட்டணம் செலுத்திய மைக்கான வங்கிச் சிட்டையை மின்னஞ்சல் மூலமாக அனுமதிகள் கிளைக்கு அனுப்பி வைக்குமாறும், கட்டணம் செலுத்தியமையை உறுதிப்படுத்தத் தவறுபவர்களுக்குப் பரீட்சைக் கான அனுமதி அட்டைகள் அனுப்பப்பட மாட் டாது எனவும் பல்கலைக்கழகத்தின் இணையத் தளத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

# குறைகளைத் தீர்த்திருந்தால் மண்டியிடவேண்டி வந்திராது

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9

"தமிழ் மக்களையே அழித்த சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகள், தற் போது இலங்கையின் இறையாண் மையைக் காப்பதற்காக தமிழ், முஸ்லிம் மக்களிடம் கோரிக்கை விடுக்கின்ற நிலையை பார்க்கின் றோம். இலங்கையை ஆட்சிசெய்த அரசுகள் தேசிய இனப்பிரச்சி னையை தீர்த்திருப்பார்களாயின் மண்டியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது" என்று நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.



யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் இறைமையைக் காப் பாற்றுவதற்காக தமிழ், முஸ்லிம் மக்களை தங்களுடன் ஒன்றிணையு மாறு பௌத்த துறவிகள் கோரிக்கை விடுக்கத் தொடங்கியுள்ளனர். அரசு இந்த நாட்டையே ஏலம்கோரி விற் கும் நிலைக்குச் சென்றுவிட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களின் பிரதேசங்கள் சீனர்களின் பல்வேறு பட்ட தேவைகளுக்காக கொடுக்கப்ப டுகின்றமையை காணமுடிகின்றது. அதுமாத்திரமல்ல இன்று இருக்கக் கூடிய மோசமான நிலையைப்பற்றி பேசக்கூடிய, எதிர்த்தரப்பில் இருக்கக்கூடிய ஐக்கிய தேசி யக் கட்சியோ, சஜித் பிரேமதா ஸவின் தலைமையில் இருக் கக்கூடிய ஐக்கிய மக்கள் சக் தியோ மாகாண சபைகளு டைய அதிகாரங்கள் பறிக்கப் படுகின்றமை தொடர்பில் அல்லது வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்களின் நிலங்க ளில் சிங்களவர்களை குடி யேற்றுகின்ற போதோ, புதி தாக பௌத்த கோவில்கள் வருகின்றபோதோ மௌனம் சாதித் துக் கொண்டே இருக்கின்றன.

ஆளுந்தரப்பாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்தாலும் பௌத்த மேலாதிக்க சக்திகள் தமிழ் மக்களு டைய கோரிக்கை என்றால் தூரவே நிற்கின்ற நிலைமையை நாங்கள் பார்க்கிறோம். என்றார். (த-26)

# ஆறரை கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி பகுதியில் முச்சக்க ரவண்டியில் 6 கிலோ 500 கிராம் கேரள கஞ் சாவை கொண்டுசென்றார் என்ற குற்றச்சாட் டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

நேற்றுமதியம் இராணுவத்தினரால் முன்னெ டுக்கப்பட்ட சோதனையின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 3 பொதிக ளில் 6 கிலோ 500 கிராம் கேரள கஞ்சா கைப்பற் றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அல்லைப் பிட்டி 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். (த-20)

# அலைபேசியில் புலிகள் படம்: இளைஞர்கைது!

கிளிநொச்சி, ஜூலை 9

விடுதலைப்புலிகள், நாம் தமிழர் கட்சி மற்றும் ஆவா குழு என்பவற்றின் சின்னங்களை அலைபேசியில் வைத்திருந் தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றச்செயல் ஒன்றுக்காக இரும்பு வாள் ஒன்றை மறைத்து வைத்திருக்கின்றார் என்ற தகவல் விசேட அதி ரடிப்படையினரின் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்தமை யைத் தொடர்ந்து கிளிநொச்சி உதயநகர் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய குறித்த இளைஞன் கைதுசெய்யப் பட்டார்.

அவரிடமிருந்து வாள் ஒன்றும் இரண்டு அலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)




# அனுபவமற்ற இங்கிலாந்திடம் அடிவாங்கியது பாகிஸ்தான்!

லண்டன், ஜூலை 9

5 அறிமுக வீரர்களுடன் களமிறங்கிய இங்கிலாந்து அணியிடம் பலமான பாகிஸ்தான் அணி படுதோல் வியடைந்தது.

பாகிஸ்தான் அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பய ணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக் கும் இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டம் நேற்று இடம்பெற்றது. இங்கிலாந்து தேசிய அணிக் குள் கொரோனா ஊடுருவியதால் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டு ஏ அணியே தேசிய அணியா கக் களமிறக்கப்பட்டுள்ளது. முதலில் துடுப்பெடுத்தா டிய பாகிஸ்தான் அணி 141 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது.

பகர் சமன் 47 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். மக்மூட் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி ஒரு இலக்கை இழந்து வெற்றிபெற்றது. மக்மூட் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
இராசலட்சுமி (மலர்)
நடராசா

தோற்றம்
04 . 05 . 1949

மறைவு
02 . 07 . 2019

ஈராண்டு கடந்ததம்மா நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து
மனம் ஆறாத் துயரோடு
விழி நீரோடு வழி கடந்து செல்கின்றோம்
புன்னகைக்கும் உங்கள் முகம் எங்களுக்கு
தினமும் வந்து போகிறதம்மா அது
உண்மையில்லை என்று நினைக்கும் பொழுது
நாங்கள் கலங்கித் தவிக்கிறோம் அம்மா
என்றும் உங்கள் ஆத்மா எங்களுடனே
இருக்க இறைவனை வேண்டுகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்

குடும்பத்தினர்
077 324 4189

### குடும்ப ஆட்சி...

இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இதேவேளை, கொரோனாவைப் பயன்படுத்தி புதிய அடக்குமுறை வழியை அரசு பயன்படுத்தத் தொடங்கிவிட்டது எனவும், போராட்டங்களில் ஈடுபடுவோர் தொலைதூர இடங்களுக்கு தனிமைப்படுத்தலுக்கு அனுப்பிவைக்கப்படும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட சட்டத்துக்கு எதிராக பத்தரமுல்லை நாடாளுமன்ற சுற்று வட்ட பகுதியில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் அமைதியான போராட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

ஆனால், பொலிஸார் மிகவும் அராஜகமான முறையில் செயற்பட்டு போராட்டத்தில் பங்கேற்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இரண்டு பௌத்த துறவிகள் மற்றும் இரண்டு பெண்கள் உட்பட 31 பேரைக் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இவர்களை பி.சி.ஆர்., அன்டிஜன் பரிசோதனைகள் எதுவுமின்றி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அவர்களைத் தொலைதூரங்களில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இது அரசின் புதிய அடக்குமுறை வழி.

கொரோனாவை பயன்படுத்தி மக்களின் உரிமை, ஜனநாயகப் போராட்டங்களை அடக்குவதற்கு அரசு தயாராகி விட்டது. பொலிஸாரை முன்னிறுத்து அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

அரசமைப்பிலுள்ள மக்களின் உரிமைகள் இந்த அரசால் மறுக்கப்பட்டுள்ளன. அரசுக்கு எதிராக மக்கள் வாய்திறக்கக்கூடாது என நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசால் இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் கூறப்படுகின்றது.

ஆனால், மக்களின் ஜனநாயக உரிமைப்போராட்டங்களுக்கு எப்போதும் ஐக்கிய மக்கள் சக்தி உறுதுணையாக நிற்கும்' என்றார். (ம-22)

### அண்ணன்மாரை....

நேற்று நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

நாடாளுமன்ற அமர்வின்போது ஆரம்பத்தில் சபாநாயகரின் அறிவிப்பு இடம்பெறும். அதன் பின்னர் புதிய உறுப்பினர் பதவியேற்பது சம்பிரதாயம். அதற்கான தருணம் வரும்வரை சபாபீடத்தில் ஒதுக்கப்பட்டுள்ள கதிரையில் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் அமர்ந்திருப்பார்.

அந்தவகையில் நாடாளுமன்றம் நேற்றுக் கூடியபோது,

புதிய நாடாளுமன்ற உறுப்பினரின் சத்தியப்பிரமாணம் செய்வது தொடர்பான அறிவிப்பை சபாநாயகர் விடுத்தார். அதன்பின்னர் கதிரையில் இருந்து பஸில் எழுந்து சபாநாயகரை நோக்கி வந்தார். அப்போது ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.

இரு கைகளையும் நெஞ்சில் வைத்து வணக்கம் தெரிவித்தபடி நடந்து வந்த பஸில், மஹிந்த ராஜபக்ச மற்றும் சமல் ராஜபக்ச ஆகியோரிடம் வந்தபோது, சற்று குனிந்து வணங்கினார்.

அதன்பின்னர் சபாபீடம் சென்று சத்தியப்பிரமாணம் செய்தார்.

ஆளுங்கட்சி பக்கம் பஸில் ராஜபக்சவுக்கு முன்வரிசை ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மேசைகளில் தட்டி பஸிலுக்கு பெரும் வரவேற்பை வழங்கினர். அதேவேளை, நிதி அமைச்சராக ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்த பின்னரே பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-ஒ.44)

### கசப்பான...

சர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

நேற்று புதிய நிதி அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'நான் பொறுப்பெடுத்துள்ள சவாலை மேற்கொள்வதற்கு அனைவரினதும் முழுமையான ஒத்துழைப்பும் அவசியம். நான் கடினமான ஒரு விடயத்தைப் பொறுப்பேற்றுள்ளேன். சவாலை ஒன்றிணைந்து வெற்றிகொள்வோம்.

பொதுமக்களின் தேவைகளே இந்த அரசினதும் எனதும் முன்னுரிமையாக அமையும். தற்போது பிரச்சினை என்ன என்பது தொடர்பான புரிதல் எனக்கு இருக்கின்றது. நாட்டின் நலன் கருதி தீர்மானங்களை எடுக்கும்போது தந்தை ஒருவரைப் போன்று சில நேரங்களில் கசப்பான விடயங்களைச் செய்ய வேண்டியேற்படும்.

அவை உண்மையாகவே பொதுமக்களின் நலன்களைக் கருத்தில்கொண்டதாக இருக்கும்' -என்றார். (ம-22)

### கச்சேரியா?...

வகையிலான பதாகைகளை வைக்கும் அளவுக்கு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் திராணி இழந்துவிட்டதா என்று பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (ம)

### 2 இராஜாங்க...

பக்ச முன்னிலையில், நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு, விநியோக ஒழுங்குப்படுத்தல், நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதைகள் உற்பத்தி, உயர் தொழிநுட்ப விவசாய இராஜாங்க அமைச்சராக, சஷிந்திர ராஜபக்ச பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அத்துடன், கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ் நிலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக மொஹான் டி சில்வா பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். (ம-22)

### பட்டாசுகள்...

தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

வவுனியாவில் பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தினர்.

மன்னார் நானாட்டான் பஜார் பகுதியில் பசில் ராஜபக்சவின் ஆதரவாளர்கள் நேற்றுக் காலை 10 மணியளவில் பட்டாசு கொளுத்தி மகிழ்ந்தார்கள். (ம-ஒ.ஐ.110,213)

### நவாலி...

ஆண்டு ஜுலை மாதம் 9ஆம் திகதி இலங்கை வான்படையால் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் சுமார் 150க்கும் அதிகமானோர் அதே இடத்திலேயே துடிதுடித்து இறந்தனர். இந்தப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டு இன்றுடன் 26 ஆண்டுகள் நிறைவடைகின்ற போதிலும் இறந்தவர்களுக்கோ அல்லது தமது உறவுகளை இழந்தவர்களுக்கோ இதுகாலும் நீதியென்பது கிட்டவேயில்லை. (ம)

### மின்சாரம்...

களின் தாய். சடலம் புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-19)

### சாவு...

னர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 391ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் சாவடைந்த 40 பேரில் 11 பெண்களும், 29 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். அதன்படி 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட பெண் ஒருவரும், 11 ஆண்களும் உயிரிழந்துள்ளனர். அதேவேளை 60 வயதுக்கு மேற்பட்ட 10 பெண்களும், 18 ஆண்களும் சாவடைந்துள்ளனர் என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

### கொரோனா....

காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 69 ஆயிரத்து 899ஆக அதிகரித்துள்ளது. கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 39 ஆயிரத்து 584ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 924ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

### ஆசிரியர்களுக்கு...

ணத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு எங்கு வைத்து தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன என்பது தொடர்பான விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆசிரியர்கள் சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்திலும்,

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆசிரியர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்திலும்,

யாழ்ப்பாணம் ஜே91/93/94/95/96 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள ஆசிரியர்கள் அரியாலை மகமாரி அம்மன் திருமண மண்டபம், தூய பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றிலும்,

காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆசிரியர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்திலும்,

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆசிரியர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் நெல்லியடி மத்திய கல்லூரியிலும்,

ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆசிரியர்கள் ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்திலும்,

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆசிரியர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் கோப்பாய் மற்றும் அச்சுவேலி மருத்துவமனைகளிலும்,

மருதங்கேணி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆசிரியர்கள் மருதங்கேணி மருத்துவமனையிலும்,

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆசிரியர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும்,

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆசிரியர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும்,

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆசிரியர்கள் மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியிலும்,

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆசிரியர்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும்

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆசிரியர்கள் உடுவில் இராமநாதன் கல்லூரி, உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் ஆகியவற்றிலும்,

வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆசிரியர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திலும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை தென்மராட்சியில் உள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு குறித்த பிரிவிலுள்ள பாடசாலைகளில் நேர அட்டவணைக்கு ஏற்ப தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 55 ஆண்டுகளின் பின்னர் இறுதிக்குள் இங்கிலாந்து

**லண்டன், ஜூலை 9**

**யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது ஹரி கேன் தலைமையிலான இங்கிலாந்து அணி.**



நேற்று அதிகாலை இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்தை எதிர்த்து டென்மார்க் மோதியது. மைக்கல் டென்மார்க்கின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 39ஆவது நிமிடத்தில் சிமொன் 'ஒன் கோல்' பதிவுசெய்ய கோல் கணக்கு 1:1 என்றானது. வேறெந்த கோல்களும் முதல் பாதியில் பதிவாகவில்லை. இரண்டாவது பாதியும் கோல்கள் இல்லாமல் நகர்ந்து கொண்டிருந்தது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் மாற்றங்கள் வராததை அடுத்து மேலதிக நிமிடங்கள் வழங்கப்பட்டன. 104ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து அணித் தலைவர் ஹரி கேன் கோலைப் பதிவுசெய்தார். இதையடுத்து முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.



சர்வதேச அரங்கில் 1966ஆம் ஆண்டு இங்கிலாந்து இறுதியாக இறுதியாட்டமொன்றில் விளையாடியுள்ளது. அதன் பின்னர் கடந்த 55 ஆண்டுகளில் இறுதிக்குள் நுழைவது இதுவே முதல் முறை. (ம)



## மத்தியூஸ் ஓய்வா?

கொழும்பு, ஜூலை 9

இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் சகலதுறை வீரருமான மத்தியூஸ் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வு பெறுவதற்கு பரிசீலித்து வருகின்றார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.


இலங்கை கிரிக்கெட் சபையின் சார்பில் கொண்டு வரப்பட்ட வருடாந்த ஊதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மறுத்து விட்டனர். சம்பளம் குறைப்பு, களத்தில் திறமையை வெளிப்படுத்தும் அடிப்படையில் ஊக்கத்தொகை போன்றவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்த இலங்கை வீரர்கள் புதிய ஊதிய ஒப்பந்தத்தை ஏற்கவில்லை.

இதையடுத்து இலங்கை கிரிக்கெட் சபை வருடாந்த ஒப்பந்தத்துக்குப் பதிலாக ஒவ்வொரு தொடருக்கும் வீரர்களுக்கு தனித்தனியாக ஒப்பந்தத்தை கொண்டு வருகிறது. இதன்படி எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் மற்றும் ரி20 தொடரில் விளையாட உள்ள இலங்கை அணிக்கான ஒப்பந்த பட்டியலில் 30 பேர் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் 29 பேர் இதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டனர். அவர்களில் இருந்து இந்தியாவுக்கு எதிரான தொடருக்கான இலங்கை அணி தேர்வு செய்யப்படும்.

ஆனால், இந்த ஒப்பந்தத்தை ஏற்க திட்டவட்டமாக மறுத்துவிட்ட மத்தியூஸ் இந்திய தொடரில் இருந்து விலகியுள்ளார். இருப்பினும் அவர் தனிப்பட்ட காரணத்துக்காக அணித்தேர்வில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்று இலங்கை கிரிக்கெட் சபையின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கை கிரிக்கெட் வாரியம் மீது கடும் அதிருப்தி அடைந்துள்ள மத்தியூஸ் ஓய்வுபெறுவதற்குப் பரிசீலித்து வருகின்றார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் மத்தியூஸோ அல்லது இலங்கை கிரிக்கெட் சபையோ எவ்வித உத்தியோகபூர்வமான கருத்துக்களையும் இன்னமும் வெளிப்படுத்தவில்லை. (ம)

# இத்தாலி - இங்கிலாந்து இறுதி நாளைமறுதினம்!



லண்டன், ஜூலை 9

யூரோ கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இத்தாலி மற்றும் இங்கிலாந்து அணிகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

இத்தாலி அணி ஸ்பெய்னைத் தோற்கடித்து இறுதியாட்டத்துக்குள் நுழைந்துள்ள நிலையில் இங்கிலாந்து டென்மார்க்கை வீழ்த்தி இறுதிக்குள் சென்றுள்ளது.

இங்கிலாந்து அணி ரஷ்யாவில் நடைபெற்ற கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பாகச் செயற்பட்டபோது 'இட்ஸ் கம்மிங் ஹோம்' என்ற வாசகம் (கிண்ணம் தாயகம் வருகின்றது) ட்ரெண்ட் ஆக்கப்பட்டது. தற்போது யூரோவில் இங்கிலாந்து இறுதிக்குச் சென்றுள்ள நிலையில் மீண்டும் 'இட்ஸ் கம்மிங் ஹோம்' வாசகம் ட்ரெண்ட் ஆக்கப்படுகின்றது.

அதேநேரம் இங்கிலாந்துக்குப் போட்டியாக 'இட்ஸ் கம்மிங் றோம்' (கிண்ணம் உரோம் வருகின்றது) என்ற வாசகம் இத்தாலியின் ரசிகர்களால் ட்ரெண்ட் ஆக்கப்படுகின்றது. உரோம் இத்தாலியின் தலைநகராகும். (ம)



## தலைவரானார் தசுன் சானக

கொழும்பு, ஜூலை 9

இலங்கை கிரிக்கெட் அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான தலைவராக தசுன் சானக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணிக்கு சமீபத்தில்தான் குசல் பெரேரா தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். அவரது தலைமையின் கீழ் இலங்கை அணி பங்களாதேஷிலும் இங்கிலாந்திலும் தொடர்களை இழந்தது.

இதையடுத்து குசல் பேரேரா தலைமைப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு சானக தலைவராக நியமிக்கப்பட்டார். சானக இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் சிறப்பாக விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

**மணமகள் தேவை**
யாழ் இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை.
075 883 0107

**வீடு வாடகைக்கு**
கச்சேரி நல்லூர் வீதியில், சகல வசதிகளுடனும் புதிதாக கட்டப்பட்ட 2 மாடி வீட்டில், மேல் மாடி மட்டும் வாடகைக்கு விடப்படும்.
077 794 7192

**IELTS New Batch**
தனிப்பட்டதும், குழு வகுப்புகள் ஆரம்பம்
077 798 9830 Brown Rd, Jaffna

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதி, 1ஆம் ஒழுங்கையில் 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
யாழ் நகரிலிருந்து 1 1/2km தூரம்.
(பரப்பின் விலை 5 லட்சம் ரூபா)
தொடர்பு : 076 221 2037, 076 734 1023, 077 064 2661

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் உரும்பிராய் கிருஷ்ணன் கோவிலடி மெயின் றோட்டுடன் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு : 077 6234 204
077 225 9798
076 412 5935

**பணிப் பெண் தேவை**
பெண் ஒருவரை வீட்டில் தங்கி நின்று பார்ப்பதற்கு 40 - 50 வயதிற்குட்பட்ட பணிப் பெண் தேவை.
தொடர்பு 077 189 6543

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.